


விலை ரூபா 40
பக்கங்கள் - 12
# ஒருவன்
ஆண்டு: 01 இதழ் : 44 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (10.12.2024)




# இறக்குமதியாகும் அரிசியை ரூ. 150க்கு விற்க முடியும்

## அதிக இலாபத்தை இறக்குமதியாளர்களே சம்பாதிப்பதாக விவசாயிகள் சங்கம் குற்றச்சாட்டு

■ கனூஷியா புஷ்பகுமார்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நாட்டு அரிசி கிலோ ஒன்றை 150 ரூபாவிற்கு விற்பனை செய்யக்கூடியதாக இருந்தாலும் அதனை 220 ரூபாய்க்கு விற்பனை செய்வதால் இறக்குமதியாளர்களே அதிக இலாபத்தை ஈட்டுவதாக தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்தார்.

இந்நாட்டு விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் நாட்டு அரிசி கிலோ ஒன்றை 220 ரூபாய்க்கு விற்பனை செய்வதாக இருந்தால், இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர்கள் பெறும் அதிக இலாபத்தை அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் ஒரு கிலோ அரிசியை இலங்கை ரூபாயில் 85 முதல் 90 ரூபாய் வரையில் கொள்வனவு

02 →



# மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கியதால் ரூ. 3.1 பில். நாட்டுக்கு வருவாய்

## குற்றச்சாட்டுகளுக்கு ரணில் விளக்கம், அரசியல் தவறை நியாயப்படுத்துகிறாரா?

■ கனூஷியா புஷ்பகுமார்



கடந்த அரசாங்கத்தின்போது வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் உத்தியோகபூர்வ அறிக்கை யொன்றை நேற்று திங்கட்கிழமை (09) வெளியிட்டிருந்தது.

அதன்படி, கடந்த அரசாங்கத்தின் குறிப்பிட்ட ஒன்பது மாத காலப்பகுதியில் மதுபான உரிமங்களால் அரசாங்கம் 3.1 பில்லியன் ரூபாயை வருமானமாக ஈட்டியுள்ளதாக அந்த அறிவிப்பில் கூறப்படுகிறது.

மேலும் குறித்த அறிக்கையில், "சுதந்திரத்திற்கு பின்னர்,

02 →

# தெ.கி வங்கக் கடலில் நகரும் தாழமுக்கம்: வடக்கு, கிழக்கில் இன்று கனத்த மழை



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று முதல் மழையின் அளவு அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, டிசம்பர் 11ஆம் திகதியாகும் போது இலங்கை மற்றும் தமிழ்நாடு கடற்கரையில் தென்மேற்கு வங்கக்கடலை அடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

02 →

# உள்ளூராட்சி தேர்தலுக்கு ஒதுக்கிய நிதியில் ரூ.72 கோடி வீண்விரயம்

■ கனூஷியா புஷ்பகுமார்




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட 8 பில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகையிலிருந்து 72 கோடியே 56 இலட்சத்து 22 ஆயிரத்து 178 ரூபாய் 36 சதம் (72,56,22,178.36) தற்போது வீண்விரயமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களை நிராகரித்து அதற்குப் பதிலாக புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதே குறித்த தொகை வீண்விரயமாக

02 →

# வீண்விரயம் தொடர்பில் ரணிலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

■ கனூஷியா புஷ்பகுமார்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வித நியாயமான காரணமும் இன்றி தேர்தலை ஒத்திவைத்தார் எனவும், இதுவொரு கூட்டு ஊழலுக்குப் பிறகு செய்யப்பட்ட அரசியல் கருக்கலைப்பு மற்றும் நிதி ரீதியாக செய்யப்பட்ட பொருளாதாரக் கொலை என்று சுதந்திர மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. அதன் தலைவர் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர்,

02 →

# ஊழல், மோசடிகளுக்கு எதிராக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்



தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக தன்னை அர்ப்பணிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊழல் ஒழிப்பு தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார் .

அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது பொறுப்பையும் கடமையையும் உரிய முறையில் நிறைவேற்றாவிடின் சட்டங்களை இயற்றுவதால் பலன் இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தேசிய நிகழ்வு நேற்று (09) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

”பெருமைமிக்க தேசத்தின் முன்னோடிகளாக இருங்கள்” என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

விரிவான செய்தி 2ம் பக்கம்

# சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட லொறியொன்று கண்டுபிடிப்பு

■ கனூஷியா புஷ்பகுமார்

சட்டவிரோதமாக உதிரிப்பாகங்களை இந்நாட்டிற்கு வரவழைத்து இணைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இசுசு ரக லொறியொன்று பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.




மன்ற உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான இந்த வாகனத்தை ஹப்புத்தளை முதுவானவத்த பிரதேசத்தில் வைத்து வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

02 →

# அரிசி வர்த்தக முதலாளி டட்லி சிறிசேன வெளிநாடு பயணம்


■ கனூஷியா புஷ்பகுமார்

பிரபல அரிசி வர்த்தகரான டட்லி சிறிசேன வெளிநாடு சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரிசி தட்டுப்பாடு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு அதற்கு மறுதினமே டட்லி சிறிசேன தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்நிலையில், நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகள்

02 →

# முல்லைத்தீவு: சிராட்டிகுளம் பகுதியில் குறைகேள் சந்திப்பு



ரவிகரன் எம்.பி கள விஜயம்



விரிவான செய்தி 2ம் பக்கம்

# தப்பிச்சென்ற சிரிய ஜனாதிபதி ரஷ்யாவில் தஞ்சம்



செய்தி 11 ம் பக்கம்

# அர்ச்சுனா எம்பிக்கு எதிராக யாழ்.பொலிஸில் முறைப்பாடு

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தியினால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா

02 →

# 10,571 ரயில் சேவைகள் ரத்து தேசிய கணக்காய்வு அறிக்கை



■ கனூஷியா புஷ்பகுமார்

இலங்கை ரயில்வே திணைக்களமானது 2023ஆம் ஆண்டில் அட்டவணைப்படுத்திய 1,22,426 ரயில் பயணங்களில் 36,771 ரயில் பயணங்கள் மாத்திரமே குறித்த நேரத்தில் இயக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

அதன்படி, 85,655 ரயில் பயணங்கள் தாமதம் அல்லது இரத்து செய்யபட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தொடர்பான 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 →

# முல்லைத்தீவு: சிராட்டிகுளம் பகுதியில் குறைகேள் சந்திப்பு

## ரவிகரன் எம்.பி கள விஜயம்

■ எஸ்.தவசீலன்

முல்லைத்தீவு – மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடாத்தினார்.

குறித்த கிராமமானது முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமம் என்பதுடன், வெள்ள அனர்த்தத்தின்போது இந்த கிராமத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்ததால், சிராட்டிகுளம் கிராமம் தனிமைப்பட்டிருந்தது. இதனால் கிராம மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சிராட்டிகுளம் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்துள்ளார்.

இதன்போது சிராட்டிகுளம் கிராமத்திற்குச்செல்லும் பிரதான வீதிச்சீரமைப்பு, நெல் உலரவிடும் தளம் அமைத்தல், யானைவேலி அமைத்தல், சிராட்டிகுளம் மாதிரிக் கிராமத்தில் தாழ் நிலப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொதுப் போக்குவரத்துப் பிரச்சினை, வனவளத் திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட விடயங்கள் இதன்போது மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அந்தவகையில் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், அவர்களின் பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைக் கடிதங்களை தனித்தனியே தன்னிடம் கையளிக்குமாறு தெரிவித்ததுடன், உரிய தரப்பினருடன் பேசி நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந்த மக்கள் சந்திப்பில் சமூக செயற்பாட்டாளர்களான யோகானந்தராசா, உதயகுமார் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துகொண்டிருந்தனர்.

# இரவு 10 மணி வரை கடவுச்சீட்டு விநியோகம்

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கையினை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்கமைய ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டை விநியோகிக்கும் நேர எல்லையை அதிகரிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய நடைமுறையின் கீழ் வார நாட்களில் இரவு 10 மணி வரை ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டினை



பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கையில் கடவுச்சீட்டு பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இலஞ்ச, ஊழலை மட்டுப்படுத்திய நாடாக இலங்கையை மாற்ற அனைவரது அர்ப்பணிப்பும் அவசியம்

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப அரச கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டும்



### சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

எத்தனை சட்டங்கள் இயற்றினாலும், எத்தனை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டாலும், அவற்றை வழிநடத்துபவர்கள் சரியாகச் செயற்படாவிட்டால், குடிமக்களுக்கு நீதி நிலைநாட்டப்படாது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு நீதி வழங்கப்படாவிட்டால், அந்த அதிகாரம் பயனற்றதாகிவிடும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (09) நடைபெற்ற "2024 சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினதேசிய நிகழ்வில்" ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் "தூய்மையான எதிர்காலத்திற்காக இளைஞர்களை ஒன்றிணைப்போம்" என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு போதுமான சட்டங்களும் நிறுவனங்களும் இருந்த போதும் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தமது மனசாட்சியிடம் கேட்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊழல் மற்றும் இலஞ்சம் என்பன சமூக அவலமாக மாறியுள்ளது. 2013 சர்வதேச சுட்டெண்ணில் 79 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2023 ஆம் ஆண்டளவில் 115 வது இடத்தைப் பிடித்துள்ளது. எனவே சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் ஏன் கொண்டாடப்படுகிறது என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

வருடா வருடம் ஊழல் மோசடிகள் அதிகரித்து வருவதாகவும் அடுத்த வருடம் அதனை குறைக்க முடியாவிட்டால் சர்வதேச தின கொண்டாட்டங்களை நடாத்துவதில் எவ்வித பயனும் இல்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 69 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதுடன் 40 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. 2022 இல் 89 வழக்குகளை தாக்கல் செய்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 45 வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளது.

இந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமைக்கான காரணத்தை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாகாது ஏன் என்பதற்கான காரணங்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் இரண்டு கான்ஸ்டபிள்கள், ஒரு கிராம உத்தியோகஸ்தர் மற்றும் ஒரு எழுதுவினைஞர் ஆகியோர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தண்டிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் சட்டம் சிலந்தி வலையைப் போன்று செயற்படுவதாக மக்கள் கருதுகின்றனர்.மேலும் அந்த வலையில் சிறிய விலங்குகள் சிக்குகின்றன. பெரிய விலங்குகள் சிலந்தி வலையை சேதமாக்கி தப்பிச் செல்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரச கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறு செய்யாமல் ஆரோக்கியமான நாடொன்றை உருவாக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

சட்டத்தை அமுல்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டுவதைத் தாமதப்படுத்துவதும் நீதியை நிலைநாட்டுவதாக அமையாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே இலங்கையை குறைந்த இலஞ்சம் பெறும் நாடாக மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் இதன் மூலம் பிரஜைகளின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பை வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ஏற்கனவே 1,000க்கும் மேற்பட்ட அரச அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 15 அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் நியமனம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பிரதமரின் செயலாளர் ஜீ.பி. சபுதந்திரி,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி டபிள்யூ. எம். என்.பி. இத்தவெல, மேல் நீதிமன்ற நீதிபதியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யசந்த கோதாகொட மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### இறக்குமதியாகும்

செய்ய முடியும் . அரிசியை இலங்கைக்கு கொண்டு வந்து சகல செலவுகளுடன் ஒரு கிலோவை 150 ரூபாய் என்ற விலையில் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,அரசாங்கம்அரிசியை இறக்குமதி செய்ததும், ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடம் இருந்து 100 ரூபாய்க்கு பெற்ற நெல் தொகை இன்னுமும் இருக்கின்றன. விவசாயிகளிடம் இருந்து 130 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டதை நான் நம்பவில்லை.

கடந்த பருவத்தில் நாட்டில் உள்ள நெல் இருப்புக்கள் மற்றும் அரிசி இருப்புக்கள் தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் பதிவேடுகளை வைத்திருக்கவில்லை. தற்போதைய அரசாங்கம் அவ்வாறு செயற்படாமல் தகவல்களை ஒழுங்காக பேணி வந்தால் அரிசி ஆலை உரிமையாளர்களால் போலியான அரிசி தட்டுப்பாட்டை உருவாக்க முடியாது,எனவும் தென்னகோன் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அதிகளவில் நுகரும் நாட்டு அரிசி மற்றும் பச்சை அரிசிக்கு தற்போது நாட்டில் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஒரு கிலோகிராம் நாட்டரிசியை 225 ரூபாய் என்ற மொத்த விற்பனை விலைக்கும், 230 ரூபாய் என்ற சில்லறை விலைக்கும் விற்பனை செய்யுமாறு அரிசி விற்பனையாளர்களுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

மேலும், இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் அவதானம் செலுத்தி, இந்த விலையைப் பின்பற்றாத அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### மதுபான அனுமதிப்பத்திரம்

2022ஆம் ஆண்டு வரையில் மதுபான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது, அரசாங்கம் கட்டணம் அறவிட்டிருக்கவில்லை. அப்போது, நாட்டில் நேரடியாக வரியை இழக்கும் போக்கு காணப்பட்டது.

வங்குரோத்து நிலையிலிருந்து நாடு விடுபட சரியான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற வழிகள் மற்றும் வழிமுறைக் குழு அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்தது. அதன்காரணமாக, உடனடி நேரடி வரி இழப்புக்கு மாற்றாக அரசாங்க வருவாயை அதிகரிக்கவும், பணத்தை வசூலிக்கவும் மதுபான உரிமம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த உரிமங்கள் அனைத்தும் கலால் திணைக்களத்தின் விதிகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளின்படி வழங்கப்பட்டதாகவும், உரிமம் வழங்கும் போது கலால் ஆணையாளர் நாயகம் பரிந்துரைத்த விண்ணப்பங்களுக்கு மட்டும் கலால் உரிமம் வழங்கப்பட்டதாகவும் இந்த வழிமுறைக்கு அப்பால் ஒரு கலால் உரிமம் கூட வழங்கப்படவில்லை என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் போது மதுபான அனுமதிப்பத்திரம் எதுவும் இலவசமாக வழங்கப்படவில்லை. நாடு பொருளாதார சிக்கலிலிருந்த நேரத்தில் வரி வருமானத்திற்கு மேலதிகமாக நாட்டிற்கு வருமானத்தைக் கொண்டு வரும் புதிய உத்தியாக இந்த உரிமங்கள் விற்பனை செய்யப்பட்டன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

### 10,571 ரயில்

10,571 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும்,70வீதமானரயில்பயணங்கள் சரியான நேரத்திற்கு பயணிக்கவில்லை எனவும் கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டில் 1,13,759 ரயில் பயணங்கள் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அதில் 36,053 ரயில் பயணங்கள் மாத்திரமே நியமிக்கப்பட்ட குறித்த நேரத்தில் பயணித்துள்ளன.

அதன்படி, 30 வீதமான ரயில் பயணங்கள் மாத்திரமே சரியான நேரத்தில் பயணித்துள்ளன.

2018 ஆம் ஆண்டின் தேசிய தணிக்கைச் சட்டம் எண் 19 மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் படி, 2023.12.31 வரையிலான நடவடிக்கைகள் குறித்து தேசிய தணிக்கைத் தலைமைச் செயலகத்தால் நடத்தப்பட்ட தணிக்கை நிதிநிலை அறிக்கையில் இவ்விடயம் கூறப்பட்டுள்ளது.

நேர்த்தியான பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குவதே ரயில்வே திணைக்களத்தின் முக்கிய பணியாக இருந்தாலும், 2023ஆம் ஆண்டில் குறித்த சேவையானது 70 வீதம் தோல்வியடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இலங்கையில் 6 வீதமான பயணிகள் போக்குவரத்தும், 6.5 வீதமான சரக்கு போக்குவரத்தும் ரயிலில் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வங்குரோத்து நிலையில் உள்ள பொருளாதாரத்தை மீட்பதற்காக நீண்ட கால நோக்குடன் செயற்படுத்தப்பட்ட இந்த மதுபான உரிமம் வழங்கும் நடைமுறையை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்தப்படுவது வருத்தமளிக்கிறது.

நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, தற்போதைய வெளிப்படையான மற்றும் முறையான புதிய வருமான ஆதாரத்தை ஒழிக்கலாமா வேண்டாமா? இல்லை என்றால் புதிய கலால் சட்டத்தை சமர்ப்பிப்பதா என்பதை அமைச்சர்கள் குழு முடிவு செய்ய வேண்டும். மேலும், இதைத் தொடர அல்லது இரத்து செய்ய அமைச்சரவைக்கு அதிகாரம் உள்ளது." எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### உள்ளூராட்சி தேர்தலுக்கு

காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பிட்ட பல செயற்பாடுகள் பழைய வேட்புமனுக்களின் படி மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்காக அச்சிடப்பட்ட உத்தியோகபூர்வவாக்குச்சீட்டுகள் எதுவும் மீள வேட்புமனுக்கள் கோரும் போது பயன்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு மீள வேட்புமனுக்களை கோரும் சந்தர்ப்பத்தில் இதுவரையில் மேற்கொண்ட அச்சிடல் உள்ளிட்ட செயற்பாடுகளை மீள பயன்படுத்த முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த தேர்தலுக்கு தபால்மூல வாக்குகள் வரையிலான செயற்பாடுகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ள நிலையில் வேட்புமனுக்களை மீள கோரும்போது அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான பின்னணியிலேயே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நிர்ணயிக்கப்பட்ட 8 பில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகையிலிருந்து 72 கோடியே 56 இலட்சம் ரூபாய் வீண்விரயமாகியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், ஊழியர்களின் சம்பளத்திற்காக 2 பில்லியனுக்கும் அதிக தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கான வாடகைத் தொகையாக 627 மில்லியன் ரூபாவும், தபால் நடவடிக்கைகளுக்காக 15 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாவும், மின்சாரத்திற்காக 6 கோடியே 80 இலட்சம் ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்களின் பணிக்காக 212 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகையும், தங்குமிடம் மற்றும் அதன் கட்டடங்களின் வாடகைக்காக 14 மில்லியன் ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் சட்டவிரோத பிரசாரங்களை நீக்குவதற்காக 55 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகை செலவாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் பிரதான சிங்கள பத்திரிகையான "மவ்பிம" ஞாயிறு வார இதழ் பத்திரிகையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வீண்விரயம் தொடர்பில்

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக செலவிடப்பட்ட 72 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் விரயமானது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயார் எனவும் சுதந்திர மக்கள் பேரவையின் தலைவர் டலஸ் அழகப்பெரும தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### சட்டவிரோதமாக

மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் எந்தவித அனுமதியுமின்றி இந்த வாகனம் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்றது.

தற்போது இந்த வாகனம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அரிசி வர்த்தக

அரலிய உள்ளிட்ட அரிசி ஆலைகளைக் கண்காணிக்க ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி, நுகர்வோர் அதிகாரசபையின் இரு அதிகாரிகள் எனும் ரீதியில் அரிசி ஆலைகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் புதிய கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்குவதற்கு அனைத்து ஆலை உரிமையாளர்களும் இணக்கம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### அர்ச்சுனா எம்பிக்கு

வைத்தியசாலைக்குள் அனுமதியின்றி பிரவேசித்து, தமது கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததுடன், தம்மை அச்சுறுத்தியதாகவும்நாடாளுமன்றஉறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக வைத்தியர் த.சத்தியமூர்த்தியினால் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

### தெ.கி வங்கக் கடலில்

இதனால், டிசம்பர் 10ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மழையின் அளவு அதிகரிக்கும் என்றும், வடகிழக்குப் பருவமழை படிப்படியாக நாடு முழுவதும் நிலைபெறும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் இன்றைய தினம் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

# தேசிய சாரணர் விருது பெற்றார் றிபாஸ்





நீண்ட காலம் சாரணியத்தில் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதவி மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.எப்.றிபாஸ் தேசிய சாரணர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தனர்.

# வாகன இறக்குமதி; அரசு எவரையும் நியமிக்கவில்லை

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவிப்பு



வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு தரப்பினரையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வாகனங்களை வாங்குவது அல்லது விற்பது குறித்து குழப்பமடையத் தேவையில்லை என குறித்த சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

4-5 வருடங்களாக வாகன இறக்குமதியின்றி எங்களது துறை வீழ்ச்சி கண்டுள்ளது. வாகனங்களை தற்போது இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்களும் வாகனம் கொண்டு வர விரும்புகிறோம்.

இந்த ஆண்டு பஸ்கள் மற்றும் லொறிகள் கொண்டு வரப்படும். அதன்பிறகு ஏனைய வாகனங்களையும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின் கீழ் விரைவில் கொண்டு வர முடியும் என்றும் நம்புகிறோம்.

தற்போது எந்தவொரு வாகனத்தையும் கொண்டு வரும் தீர்மானம் அரசாங்கத்திற்கு இல்லை. புதிய அரசாங்கத்தின் இந்த முடிவு மாறுமா என்று கூற முடியாது.தங்களிடம் உள்ள வாகனத்தை விற்பனை செய்வது தொடர்பில் யாரும் குழப்பமடைய வேண்டாம். வாகனங்கள் எப்போது கொண்டுவரப்படும் என அரசாங்கம் இன்னும் உறுதியாக அறிவிக்கவில்லை. தங்கள் வாகனத்தை விற்பனை செய்வது தொடர்பில் மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.இது குறித்து அரசாங்கம் அறிக்கை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது.

**ரிஷபம்** தங்கள் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும்.

**மிதுனம்** குடும்ப வாழ்வுக்கு நேரம் ஒதுக்கி கவனம் செலுத்துங்கள்.

**கடகம்** நீங்கள் யோகா தியானத்துடன் நாள் தொடங்கலாம்.

**சிம்மம்** இன்று உங்கள் திருமண வாழ்வில் தனிச்சிறப்பான நாளாக இருக்கும்.

**கன்னி** உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்** இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

**விருச்சிகம்** இன்று புதிய திட்டங்களை அமுல் செய்ய அற்புதமான நாள்.

**தனுசு** நண்பர்கள் ஆதரவாக இருப்பதை அறிவீர்கள்,ஆனால் பேசுவதில் கவனமாக இருங்கள்.

**மகரம்** இன்று அதிக வேலை உள்ள நாளாக இருந்தாலும் உடல்நலம் நன்றாக இருக்கும்.

**கும்பம்** உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சற்று பின்னடைவாக உணர்வீர்கள்.

**மீனம்** நிதானத்தை உரசிப் பார்ப்பதால் வாக்குவாதமும் மோதலும் ஏற்படும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** நவமி திதி அதிகாலை 03:32 AM அதன் பிறகு தசமி திதி.
**நட்சத்திரம்:** உத்திரட்டாதி நட்சத்திரம் காலை 11:34 AM அதன் பிறகு ரேவதி நட்சத்திரம்.
**யோகம்:** அமிர்த-சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** மகம், உத்திரம்.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** மாலை 03:00 PM முதல் 04:30 PM வரை,
**குளிகை:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை,
**எமகண்டம்:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,

# யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று நடமாடும் சேவை




பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நடமாடும் சேவை இன்று (10) யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறுகிறது.

இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான இந் நடமாடும் சேவையானது யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இன்று (10) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை நடைபெறுமென யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

மேலும், இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உரிய ஆவணங்களுடன் வந்து பெற்று பயனடையுமாறு அவர் கேட்டுள்ளார்.

# கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலர் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக சட்டத்தரணி எம்.ஏ.எல்.எஸ். மந்திரிநாயக்க நியமிக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டத்தரணி மந்திரிநாயக்கவிற்கு நேற்று (09) காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்துக் கையளித்தார்.

## சுற்றறிக்கையினால் குழப்பம்

# பரீட்சை கொடுப்பனவுகளை முறையாக வழங்குமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை





பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை முறையாக வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பரீட்சை ஆணையாளரினால் நேற்று முன்தினம் (08)வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினால் போக்குவரத்து கொடுப்பனவுகள் தொடர்பில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நாட்களில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்ட இரண்டு கடிதங்களால் பரீட்சை ஊழியர்களுக்கு புதிதாக சிக்கல் எழுந்துள்ளது. நவம்பர் மாதம் 1ஆம் திகதி முதலாவது கடிதம் வழங்கப்பட்டது. அந்த கடிதத்தின்படி, பரீட்சை மண்டபத்திலிருந்து பயணிக்கும் தூரம் 10 கிலோமீற்றருக்கு அதிகமாக இருந்தால் 1000 ரூபா செலுத்த முடிவு செய்யப்பட்டது. டிசம்பர் மாதம் 8ஆம் திகதி பரீட்சை ஆணையாளரால் மற்றொரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி 1000 ரூபாவாக இருந்த போக்குவரத்து கொடுப்பனவு 500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 5 முதல் 10 கிலோமீற்றர் இடைப்பட்ட தூரத்திற்காக 750 ரூபா முன்னதாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது தற்போது 400 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 முதல் 5 கிலோமீற்றருக்கு 500 ரூபாவாக இருந்த நிலையில், தற்போது அது 300 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 கிலோமீற்றருக்கு குறைவாக இருந்தால் 300 ரூபா வழங்குவதாகவும், அது தற்போது 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பரீட்சை கண்காணிப்பாளருக்கும் கொடுப்பனவு வழங்க வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது புதிய கடிதமொன்று வெளியிடப்பட்டு இவ்வாறு கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் அனைவரும் குழப்பத்தில் இருக்கின்றனர் என தெரிவித்தார்.

# உணவகங்களில் தேங்காய் சம்பல் வழங்குவதில் சிக்கல்



சந்தையில் தேங்காயின் விலை அதிகரிப்பு காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள பல உணவகங்களில் தேங்காய் சம்பல் வழங்குவதை நிறுத்தியுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சில பகுதிகளில் தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபாவாக உயர்ந்துள்ளதால் உணவக உரிமையாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக அதன் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார். அரிசி, தேங்காய், முட்டை, வெங்காயம் ஆகியவற்றின் விலை உயர்வால் உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலையை 30 வீதத்தால் உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார். இதேவேளை, ஒரு கிலோ கோழி இறைச்சி 1280 ரூபாவாக உயர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேங்காய் விலை உயர்வால் உள்ளூர் அளவில் அப்பம் தயாரித்தல் மற்றும் மதிய உணவு பொட்டலங்கள் தயாரித்து விற்பனை செய்வதும் பாதிக்கப்பட்டுள்ளது.

# ஹாட்லி அதிபர் கலைச்செல்வனுக்கு பழைய மாணவர் பணி எழில் விழா



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை, காலை 9 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுநிலை அதிபர் த.கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கியற்றுறை சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. 1994 ஆம் ஆண்டு முதல் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய த.கலைச்செல்வன் 2021 ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக மிளிர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

# தமிழ்ச்சங்க அறிவோர் ஒன்றுகூடலில் தமிழர் அரசியல் நிலை குறித்து உரை

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் "நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தமிழர்களின் அரசியல் நிலை" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திரன் திருவரங்கனும் "பெண்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் " என்ற தலைப்பில் சட்டத்தரணியும் சமூக, அரசியல் செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கமும் உரையாற்றுகிறார்கள்.

விநோதன் மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தலைமை தாங்குகிறார்.

# குரங்கு விரட்ட புதிய சாதனம் கண்டுபிடிப்பு



நாட்டின் பல பகுதிகளிலும் விலங்குகளினால் பயிர்களுக்கு பாரியளவில் பாதிப்பு ஏற்படுகின்றன. குறிப்பாக கேகாலை மாவட்டத்தில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பினால் அந்த மாவட்ட மக்கள் தமது பயிர்களைக் காப்பாற்ற முடியாமல் நிர்க்கதியாகியுள்ளனர். அதற்கமைய, மேற்படி பிரச்சினைக்கு பொறியியலாளர் ஆனந்த தேவசிங்க மற்றும் இளம் பொறியியலாளர்கள் குழு தற்காலிக தீர்வை அறிமுகப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விலங்குகளை விரட்டும் வகையில் ஒரு தானியங்கி சூரிய சக்தியில் இயங்கும் மின்னணு சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.இந்த சாதனம் சமீபத்தில் புலத்கொஹுபிட்டிய, வாகொல்ல பகுதியில் சோதனை செய்யப்பட்டது. குரங்குகள் வரும்போது, சுமார் 7 மீட்டர் தொலைவில் இச் சாதனம் அதைக் கண்டறிகிறது. பிறகு அது ஒரு சிறிய கதிர் வீச்சுடன் ஒலியை எழுப்புகிறது. குரங்குகள் அதை உணர்கிறது. பின்னர் குரங்குகள் அப்பகுதியை நெருங்காது வெளியேறி செல்கின்றன. இதிலிருந்து வெளிப்படும் ஒலியை அவ்வப்போது மாற்ற வேண்டும். இல்லையெனில், குரங்குகள் அந்த சத்தத்துக்கு பழகிவிடும் என பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# "மக்களின் உரிமையில் கை வைக்க வேண்டாம்"

ஒரு கிலோ நாட்டு அரிசியை மொத்த விற்பனை விலையாக 225 ரூபாவுக்கும் சில்லறை விலை 230 ரூபாவுக்கும் நுகர்வோருக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கண்டிப்பான உத்தரவை பிறப்பித்திருக்கிறார்.

எதிர்வரும் பத்து நாட்களுக்குள் இது தொடர்பில் தீவிரமாக செயற்படுமாறும், இதற்கு முரணாக செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் ஜனாதிபதி நுகர்வோர் அதிகாரசபைக்கு அறிவித்துள்ளார்.

வர்த்தக, வர்த்தக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி வர்த்தகர்களுடன் சனிக்கிழமையன்று (07) இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகர்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு குறைந்த வட்டியில் வங்கிக்கடன் வழங்கப்பட்டதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அரிசிக்கான மக்களின் உரிமையில் கை வைக்க வேண்டாம் என அரிசி ஆலை உரிமையாளர்களிடம் கடும் தொனியில் தெரிவித்துள்ளார்.

ஆட்சிப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றதிலிருந்து, அரிசி ஆலை உரிமையாளர்களோடு பல சுற்று பேச்சு வார்த்தைகளை நடத்திவிட்டார். அவர்கள் திருந்தியதாகவும் இல்லை திருத்திக் கொண்டதாகவும் இல்லை. நினைத்ததைச் செய்யலாம் என்ற இறுமாப்போடு நடந்து கொள்கிறார்கள் என்பது மட்டும் தெட்டத் தெளிவாகிறது.

அரிசியை கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்கு ஏற்கனவே நடந்த பல கூட்டங்களில் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

என்றாலும், ஆலை உரிமையாளர்கள் தன்னிச்சையாகவே நடந்து கொண்டார்கள்.

ஜனாதிபதி தலைமையில் சனிக்கிழமை நடந்த கூட்டத்தில், அறுதியும் இறுதியுமான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரிசி விற்பனை செய்யப்படாவிட்டால், சட்டம் பாயும் என்று ஜனாதிபதி எச்சரிக்கை தொனியில் தெரிவித்திருப்பது, ஓரளவு திருப்தியை தருகிறது.

இந்த எச்சரிக்கையோடு மட்டும் நின்று விடக்கூடாது. அப்பாவி மக்களுக்காக சட்டத்தை கையில் எடுக்க வேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு இருக்கிறது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கண் மூடித்தனமாக நிமிடத்திற்கு நிமிடம் அதிகரிக்கப்படுகின்றன...ஏன் உயர்த்துகிறார்கள்...? எதற்காக உயர்த்துகிறார்கள்...? காரணம் எதுவும் இன்றி திட்டமிட்ட முறையில் விலை அதிகரிப்பு செய்வதென்பது, மக்களை பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு அரசாங்கத்தோடு பேரம் பேசுவதற்கு ஒப்பானதாகவே பார்க்கப்படுகிறது.

இலங்கையை பொறுத்த வரைக்கும், நவம்பர், டிசம்பர், ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை பண்டிகை காலங்கள். இங்கு வாழும் சகல மக்களும் மகிழ்வுறும் மாதங்களாக இதனை கொள்ளலாம்.

என்றாலும், மக்களை சுரண்டி கொள்ளை இலாபம் அடிக்கும் சிறப்பு மாதங்களாக வர்த்தகர்கள் இக்காலங்களை பயன்படுத்துகிறார்கள் என்பது வேதனை அளிக்கிறது. மக்களை சுரண்டி எடுப்பதில், நவீன முறைகளை இந்த வியாபாரிகள் கையாளுகிறார்கள் என்பது அப்பாவி பொதுஜனங்களுக்கு புரிய முடிவதில்லை.

கவர்ச்சிகரமான விளம்பரங்கள், விலைகளை பதிவிடுவதில் வித்தியாசமான முறைகள், வாடிக்கையாளர்களை கவர்ந்து இழுப்பதில் போலித்தனங்கள்.... இவைகள் எல்லாம்,சர்வ சாதாரணமாக சமூகமயப்படுத்தப்பட்ட விடயங்கள். ஆனால், பொருட்களை பதுக்கி வைத்து, செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தியவாறு விலைகளை அதிகரிப்பு செய்து வருகிறார்கள். இதனை, புதிய தந்திரமாக வர்த்தகர்கள் ஈடுபடுகிறார்கள் என்பது, அப்பாவி மக்களுக்கு தெரியாவிட்டாலும், அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும்.

கடந்த காலங்களில், பதவியிலிருந்தது அரசாங்கங்களை பணயமாக வைத்து, வர்த்தகப் பெரும்புள்ளிகள் ஆடிய ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆட்சியில் இருந்த அதிகாரம் படைத்தவர்களுக்கு, கப்பம் கொடுத்துவிட்டு, அதனை ஈடு செய்வதற்காக, பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கி வந்ததுதான் வரலாறு.

ஆட்சியில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தி - இடதுசாரி அரசாங்கத்துக்கு இது தெரியாத ஒன்றல்ல. முதலாளித்துவத்தின் உச்ச முறைமையை இந்த அரிசி விற்பனையிலும் தொடர முற்படுகிறார்கள். அரிசி விலை ஏற்றமும், பதுக்கி வைத்து - செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி இருக்கும் இன்றைய நிலையும், கடந்த கால, சுரண்டல் தொடரின் நடைமுறை படுத்தல்களாகும்.

ஆகவே, அரசாங்கம் மற்றவர்களின் சாக்குப் போக்குகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாமல், சட்டத்தை கையில் எடுப்பது தான், இன்றைய தேவை. மக்களை வதைத்து பழக்கப்பட்டு போன அரிசி மாபியாக்கள், வாலை நிமிர்த்துவதற்கு இடமளிக்கக் கூடாது.

இந்த அரசாங்கத்தையும், இடதுசாரி சிந்தனையையும் நம்பித்தான், மக்கள் அதிகார ஆணையை வழங்கி இருக்கிறார்கள். அது வீண் போய் விடக்கூடாது. அரிசி ஆலை உரிமையாளர்களை சந்தித்த, ஜனாதிபதி கூறிய வார்த்தை மிகவும் உணர்வுபூர்வமானது.

"அரிசியை பயன்படுத்தும் மக்களின் உரிமையில் கை வைக்க வேண்டாம்."

இதனைத்தான் நாமும் உரத்துச் சொல்கிறோம்.




# உரிமைகளும் சுயமரியாதையும்

துடி. சிந்துஜா

ஒவ்வொரு நாளுமே ஏதோவொரு காரணத்துக்காக சிறப்பானதாக கருதப்படுகிறது.

அந்த வகையில் இன்று மிகவும் சிறப்பான தினம். காரணம் இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்ட பின், மனித உரிமைகளுக்கான பிரகடனத்தை உருவாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, இக் குழு சுமார் 30 பிரிவுகளின்



## சர்வதேச மனித உரிமைகள் தினம்

கீழ் மனித உரிமைகளை அடையாளம் கண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஐ.நா சபையில் சமர்ப்பித்தது.

இப் பிரகடனத்தை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி ஐ.நா சபையில் 58 நாடுகள் அங்கீகரித்தன.

அதன்படி, 1950 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினம் பிரகடனப்படுத்தப்படுகிறது.

1955 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பிரகடனத்தை இலங்கை ஏற்றுக்கொண்டது.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அவன் வாழ்வதற்கான உரிமையைப் பெறுவதும் சக மனிதனை வாழ விடுவதற்கான நெறிமுறையை உணர்த்துவதுமே இந் நாளின் நோக்கமாகும்.

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், நாடு, சமுதாயத் தோன்றல், சொத்து, பிறப்பு, சமூக உயர்வு என எந்த வேறுபாடுகளும் இன்றி ஒவ்வொருவரும் வாழ்வதன் அவசியத்தையும் உணர்த்த இத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

வாழும் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், மருத்துவம், கல்வி, சுகாதாரம், குடிநீர் ஆகியன ஒரு மனிதனுக்கு அவசியம் கிடைக்க வேண்டியது.

ஆனால், நம்மில் எத்தனை பேருக்கு இச் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது எனத் தெரியவில்லை.

ஏதோ ஒரு வகையில் ஒரு மனிதன் சக மனிதனால் ஒடுக்கப்படுவதும் அவனுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

இப் பூமியில் பிறக்கும் மனிதனுக்கு வாழும் உரிமை என்பது மிக மிக இன்றியமையாதது. ஆனால், குழந்தை பிறந்தவுடன் ஏதோவொரு காரணத்துக்காக அக் குழந்தையை கொலை செய்துவிடுகின்றனர். அண்மைக் காலங்களில் இதுபோன்ற பல சம்பவங்கள் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் பதிவாகியிருந்தன.

இங்கே பச்சிளம் குழந்தைக்கான வாழும் உரிமை முற்றாக மறுக்கப்படுகிறது, அழிக்கப்படுகிறது எனக் கூறினால் பொருத்தமாக இருக்கும்.

அடுத்ததாக பேச்சுரிமை. தாம் கூறவந்த விடயங்களை தெளிவுபடக் கூறவும், கருத்துக்களை முன்வைக்கவும் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால், எளியவர்களின் குரல்கள் ஓங்கினால் அதற்கான இடம் கொடுக்கப்படுகிறதா?

செல்வாக்கிலும் பணத்திலும் உயர் நிலையில் இருப்பவர்கள் எது கூறினாலும் கேட்பதற்கும் கை, தட்டுவதற்கும் ஒரு கூட்டம் காத்துக் கிடக்கிறது.

ஆனால், எளியவனின் பேச்சையும் அவனுக்கான உரிமைகளையும் கேட்க எப்போது உயர் பதவிகளில் இருப்பவர்களின் செவிகள் திறக்கப்படுகிறதோ அப்பொழுதுதான் பேச்சுரிமை அனைவருக்கும் உண்டு என்று கருதப்படும்.

எழுத்துச் சுதந்திரம் என்பது பெரும்பாலும் பத்திரிகைத் துறையில் இருப்பவர்களுக்கு பொருந்தும். சமூகத்தில் நடக்கும் பல சதிகளை, அநியாயங்களை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கு எழுத்து ஒரு ஆயுதமாக பயன்படுகிறது.

ஆனால், உண்மைகளை வெளி உலகத்துக்கு தெரியப்படுத்திய காரணத்துக்காக எத்தனை ஊடகவியலாளர்கள், பத்திரிகை யாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்? அப்போது பெயரளவில் தான் எழுத்துச் சுதந்திரம் உள்ளதா எனும் கேள்வி அனைவருக்குள்ளும் எழுகிறது.

மனிதனுக்கு மிக மிக முக்கியமானது மருத்துவம். ஆனால், அதில் கூட பல ஏற்றத் தாழ்வுகள், பாரபட்சங்கள் பார்க்கப்படுகின்றன.

பணம் படைத்தவர்களுக்கு ஒரு மருத்துவம். சாதாரண மக்களுக்கு ஒரு மருத்துவம். கவனிப்புகளும் வித்தியாசப்படும். மருத்துவர்களின் அலட்சியத்தால் இலங் கையில் கூட எத்தனையோ உயிர்கள் பறிபோயுள்ளன. இதுவே செல்வந்தர்களுக்கு இதுபோன்ற அநீதி இழைக்கப்படுமா? நிச்சயமாக இல்லை. காரணம் அவர்களிடம் பணம் உண்டு.

மருத்துவம் என்பது ஒரு மனிதனுக்கு மிக மிக அவசியம் மற்றும் கிடைக்க வேண்டிய உரிமை. அதுவே கேள்விக்குறியாகும் பட்சத்தில், எளிய மக்களின் உரிமைகளுக்கு யார் பொறுப்பு?


அடுத்ததாக கல்விச் செல்வம். அனைவருக்குமே கல்வி அறிவு மிகவும் முக்கியம். அது மறுக்கமுடியாத உரிமை. ஆனால், எத்தனையோ பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாமல் உள்ளனர். காரணம் வறுமை. பாடசாலை செல்வதற்கு அவர்களின் பொருளாதார நிலை ஒத்துழைப்பதில்லை.

அடிப்படை கல்வி உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடுகிறது.

மனிதன் உணவின்றி உயிர் வாழ முடியாது. ஆனால், நம்மில் எத்தனையோ பேர் உணவில்லாமல் ஒரு வேளை மாத்திரம் உணவு உண்டு வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இதுபோன்று எத்தனையோ உரிமைகள் இலை மறை காயாக மறுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலை எப்போது மாறும்? இந்த மனித உரிமைகள் தினத்திலாவது, அனைவருக்குமான உரிமைகள் கிட்டட்டும்! ■

> இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், நாடு, சமுதாயத் தோன்றல், சொத்து, பிறப்பு, சமூக உயர்வு என எந்த வேறுபாடுகளும் இன்றி ஒவ்வொருவரும் வாழ்வதன் அவசியத்தையும் உணர்த்த இத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது



# வடமராட்சியில் இளம் தாய் திடீர் மரணம்

யாழ்ப்பாணம், வடமராட்சி, அல்வாயில் இளம் தாய் ஒருவர் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளார்.

அல்வாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் நிரோஷா (வயது- 32) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் வீட்டிலிருந்தபோது அவர் திடீர் சுகவீனமுற்றதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்தே சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார். நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் நடைபாதை கடைகளை அகற்றுமாறு உத்தரவு

(கி.வசந்தன்)

வவுனியா நகரில் உள்ள பொதுப் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படும் நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு வவுனியா நகரசபை செயலாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலுப்பையடிப்பகுதி மற்றும் சந்தைக்கு அண்மித்த பகுதிகள், வைத்தியசாலை வீதி ஆகியவற்றில் வியாபாரத்தை முன்னெடுத்துவரும் நடைபாதை கடைகளை அகற்றுமாறே குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் உடனடியாக கடைகளை அகற்றுமாறு கோரப்பட்டுள்ளதுடன், அகற்றப்படாத விடின் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையினை நகரசபை முன்னெடுக்கும் என்று செயலாளரால் அறிவித்துள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வவுனியா மாவட்ட செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வவுனியா நகரப்பகுதிகளில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பிரதான வீதிகளினூடாக பயணம் செய்கின்றனர். இதனால் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்படுகிறது.

இது தொடர்பாக வவுனியா நகரசபைக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# மூடிய கிணற்றில் பெண்ணின் சடலம் மீட்பு

(பு.கஜிந்தன்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் கற்கோவளம் வராத்துப்பளை பகுதியில் பெண் ஒருவரது சடலம் கம்பி வலையால் மூடப்பட்ட பொதுக் கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை நேற்று முன்தினம் பிற்பகலிலிருந்து காணவில்லை என அவரது குடும்பத்தினர் தேடிச் சென்றவேளை கம்பி வலையால் மூடிய கிணற்றடி பகுதியில் தொலைபேசி சத்தம் ஒலித்தது. இந் நிலையில் அக்கிணற்றை அவரது மகன் எட்டிப்பார்த்த வேளை சடலம் காணப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தாயான விமலன் சிந்து என்கின்ற 42 வயதுடையவராவார். இது தொடர்பான தீவிர விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிராட்டிகுளம் வீதியை புனரமைக்க ரவிகரன் எம்.பியிடம் கோரிக்கை

முல்லைத்தீவு எல்லைப்புறக் கிராமமான சிராட்டிகுளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரனிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு,மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் ரவிகரன் எம். பி. மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே மக்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

வெள்ள அனர்த்தத்தின் போது இந்தக் கிராமத்துக்குச் செல்வதற்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்ததால், கிராமம் தனிமைப்பட்டிருந்தது. இதனால் குறித்த கிராம மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்தனர். இதன்போது, சிராட்டிகுளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதிச் சீரமைப்பு, நெல் உலரவிடும் தளம் அமைத்தல், யானைவேலி அமைத்தல், சிராட்டிகுளம் மாதிரிக் கிராமத்தில் தாழ்நிலப் பகுதியில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பொதுப் போக்குவரத்துப் பிரச்சினை, வனவளத் திணைக்களத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன்போது மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அத்தோடு உரிய தரப்பினருடன் பேசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.



# இனப் பிரச்சினையை சீனா குறுகிய நோக்கத்தில் பார்க்கக் கூடாது

**சபா குகதாஸ் தெரிவிப்பு**

(பு.கஜிந்தன்)

தமிழ் மக்களின் நீண்டகால தேசிய இனப் பிரச்சினையை தற்போதைய நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளை வைத்து சீனா குறுகிய நோக்கத்தில் பார்க்கக் கூடாது என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சீன தூதுவர் கூறிய கருத்து தமிழ் மக்களின் நீண்டகால தேசிய இனப் பிரச்சினையை குறுகிய நோக்கத்தில் பார்க்கும் செயலாகவே உள்ளது. எமது போராட்டத்தை சீனா நன்கு அறிந்து உள்ள நிலையில் தூதுவரின் கருத்து ஏற்ற செயல் அல்ல. யாழ். தேர்தல் தொகுதியில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்ததை காரணமாக வைத்து தமிழ் மக்கள் தெற்குடன் கைகோர்த்து விட்டனர் என கூறுவது ஏற்புடையதல்ல.

ஆகவே சீனா தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க விரும்பாவிட்டாலும் தமிழ் மக்கள் உணர்வுகளை காயப்படுத்தாமல் இருப்பது நல்லது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் கைதான எட்டு இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றத்தில் கைதான 8 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், சனிக்கிழமை இந்திய மீனவர்கள் 8 பேரைக் கைது செய்ததுடன், அவர்களது இரண்டு படகுகளையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் சாலினி ஜெயபாலச்சந்திரன் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தியபோது, 8 பேரையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாணத்தில் ஊடகவியல் பயிற்சி

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குட்பட்ட ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதி அனுசரணையில் நீதித்துறைக்கான அனுசரணை திட்டத்தின் கீழே குறித்த பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. "அக்கறையுடன் கூடிய ஊடகம்" எனும் தலைப்பில் நடைபெற்ற குறித்த பயிற்சிநெறியில் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குட்பட்ட சுமார் முப்பது ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர். இதில் வளவாளராக ஊடக ஆசிரியர் பிரேம் கலந்து கொண்டார்.

# வவுனியா கோவில் குளத்தில் இறந்து கிடந்த முதியவர்

வவுனியா கோவில்குளம் சந்தி அருகில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வவுனியா கோவில் புதுக்குளத்தை சேர்ந்த 63 வயதுடைய எம். விஜயரத்தினம் என்பவரே மரணமடைந்தவராவார். மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கருவேலங்கண்டல் பிள்ளையார் கோவில் காணி அபகரிப்பு

**ஜனாதிபதியின் கவனத்திற்கு**

(ஜதுர்சிகா)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட கருவேலங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலுக்கு வழங்கவிருந்த காணி அபகரிப்பு தொடர்பில் பக்கச் சார்பாக செயற்பட்டதாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இக் காணிக்காக பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்ட காணி பயன்பாட்டுக் குழுவில் 2 ஏக்கர் கணி வழங்குவதாக அனுமதிக்கப்பட்ட தீர்வினை பக்கச்சார்பாக நடைமுறைப்படுத்தியதற்காக கிராம அலுவலர், காணிபகுதி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு எதிராகவே அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கருவேலன் கண்டல் பகுதியில் 1968 ஆம் ஆண்டு மயில்வாகனம் தம்பு என்பரால் பிள்ளையார் ஆலயம் வைக்கப்பட்டு வழிபட்டு வந்துள்ளார்கள்.

காலப்போக்கில் 2005 ஆம் ஆண்டளவில் பொது மக்களின் கோயிலாக பதிவு செய்யப்பட்டு அரசாங்க நிதி உதவித்திட்டம் பெறப்பட்டுள்ளது.

கோவிலுக்கு அருகில் உள்ள 6 ஏக்கர் 28 பேர்ச் அறுதி உறுதி தனியார் காணியாக காணப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு அறுதி உறுதி காணியின் உரித்துடைய முத்துக்குமார சூரியர் நகுலசூரியர் என்பவர் வெளிநாட்டில் இருந்து வந்து கோவில் அமைந்துள்ள 2 ஏக்கர் காணியினை பிடித்து வரைபடம் வரைந்து பிரதேச செயலகத்திற்கு அந்த காணியினை தனக்கு உரித்தாகும் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, ஆலயத்திற்கு உரிய 2 ஏக்கர் காணியினை ஆலய நன்மை கருதி வழங்ககோரி பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக்கூட்டதிலும் குறித்த காணியை ஆலயத்திற்கு வழங்க தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில், தற்போது தனிநபர் ஒருவர் குறித்த காணியை விலையாக வாங்கியதன் பின் ஒரு ஏக்கர் வரையிலான கோவில் காணியினை அபகரித்து வயல் செய்து வருகின்றார்.

பழைய நிர்வாகத்தினை கலைத்துவிட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கோவிலின் அபிவிருத்தி பணிகள் நிறுத்தப்பட்டு எட்டு மாதங்கள் கடந்து விட்ட நிலையில் பழைய நிர்வாகத்தினை கலைப்பதற்கான காரணம் காணியினை அபகரிப்பதற்கு என திட்டமிடப்பட்டுள்ளது இந்த திட்டமிடலுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணிப்பகுதி உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலரும் உடந்தையாக இருக்கின்றனர்.

பணத்தினை கொடுத்து கோயிலினை கட்டும் பழைய நிர்வாக உறுப்பினர்கள் இந்த காணிப்பிணக்கினை கேட்டபோது அவர்களின் கருத்தினை ஏற்க மறுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தனிநபர் ஒருவருக்கு கணி அபகரிப்பிற்கு உறுதுணையாக இருக்கின்றமை வெளிவந்துள்ளது.

தனியார் காணிக்கு கிழக்கு பக்கமாக கருவேல் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது தனியாருக்கு சொந்தமான 6 ஏக்கர் 28 பேர்ச் காணி உள்ளது. அந்த காணியினையே தற்போது அங்குள்ள தொழிலதிபரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான நபர் விலைக்கு வாங்கிவிட்டு கருவேலன் விநாயகர் கோவிலுக்கு சொந்தமான காணியினையும் அபகரித்து வயல் செய்து வருகின்றார்.

இரு காணிகளின் பழைய எல்லைகளை கண்டு மீள் பார்வை செய்தால் இந்த காணிப்பிணக்கு தீர்விற்கு வரும் இதனைத்தான் இந்த ஆலயத்தின் பழைய நிர்வாகம் கோரி வருகின்றது.

இந்த காணிப்பிணக்கில் அரச அதிகாரிகள் முறைகேடாக செயற்பட்ட விதம் மற்றும் அரச காணியினை தனிநபர் அபகரிப்பதற்கு உடந்தையாக இருந்த உத்தியோகத்தர்கள் திணைக்கள அதிகாரிகள் தொடர்பில் நீதியை நிலைநாட்ட வேண்டும் என பழைய நிர்வாகத்தினை சேர்ந்தவர்கள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

# கட்டுடைக் கிராம வீதியின் அவலம்

மானிப்பாய் மேற்கு (ஜு/140) பகுதியில் கட்டுடைக் கிராமத்தில் அமைந்துள்ள "கட்டுடை வீதியானது" நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

மழை காலங்களில் குழிகளில் வெள்ளநீர் நிரம்பி காணப்படுவதால் மக்கள் பல சௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியின் பின் அரைவாசிப் பகுதி புனரமைக்கப்பட்டு முக்கியமான முன் பகுதி புனரமைக்கப்படாமல் உள்ளது. இவ்வீதியின் முன்பகுதியில் பாடசாலைகள்,கிராம சேவகர் – அபிவிருத்தி உத்தியோகத்தர் – சமுர்த்தி உத்தியோகத்தர் காரியாலயங்கள் அமைந்துள்ளன. மழைக் காலங்களில் வாகனங்கள் செல்லும் போது நடந்து செல்ல முடியாத நிலை. வாகனங்கள் பாதையின் குழிகளில் விழுந்து சேதமடைவதாகவும் விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களும் அதிகமாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர். எனவே இன்னல்கள் மேலும் இடம்பெறுவதை தவிர்த்து விரைவாக இவ்வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் தெரிவிக்கின்றனர்.



# மூளாயில் கசிப்புடன் சந்தேக நபர் கைது

(பு.கஜிந்தன்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் – வேரம் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் சந்தேக நபரான 24 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குறித்த நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிரியாவின் சிங்கம் வீழ்ந்த கதை



ஆர்.மனோசங்கர்

அசாத் என்றால் அரபு மொழியில் சிங்கம் என்று பொருள். இந்நிலையில், சிரியாவில் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வாதிகாரம் செய்து வந்த அசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சிரியா ஜனாதிபதி பஷார் அல் அசாத் பதவி நீக்கம் செய்யப்பட்டு, இரத்தம் சிந்தாத புரட்சியில் எதிர்க்கட்சிப் படையான ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (எச்டிஎஸ்) ஆட்சியைக் கைப்பற்றியது.

தலைநகர் டமாஸ்கஸ் கைப்பற்றப்பட்டதை அடுத்து ஜனாதிபதி பஷார் அல் அசாத் தனது குடும்பத்துடன், வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளார்.

அசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் ரஷ்யாவில் தஞ்சம் அடைந்துள்ளனர். ரஷ்யாவில் அவர்கள் பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு அடைக்களம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்ய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவின் ஜனாதிபதியான 24 ஆண்டுகளாக பஷர் அல் ஆசாத் பதவி வகித்து வந்துள்ளார்.

அதற்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், அவரது தந்தை ஹபிசுல் அசாத் ஆட்சி செய்தார். இந்நிலையில், ஐந்து தசாப்தங்களாக நீடித்த அசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

**கார் விபத்தில் சகோதரன் பலி**

முன்னாள் ஜனாதிபதி ஹபிசுல் அசாத் மற்றும் அவரது மனைவி அனீசாவின் இரண்டாவது மகனாக 1965 செப்டம்பர் 11ஆம் திகதி பஷார் அல் அசாத் பிறந்தார்.

பஷார் அல் அசாத்தின் குடும்பம் அலாவைட் எனப்படும் சிரியாவை சேர்ந்த ஒரு பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த பிரிவைச் சேர்ந்த பலர் பொருளாதார நெருக்கடி காரணமாக அந்நாட்டின் இராணுவத்தில் இணைந்துகொண்டனர்.

தனது தந்தையிடம் இருந்து அதிகாரத்தைப் பெற்று நாட்டை வழிநடத்துவதற்கு பஷார் அல் அசாத்திற்கு ஆரம்பத்தில் முன்னுரிமை அளிக்கப்படவில்லை. அவரது மூத்த சகோதரர் பஸாலுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

எனினும், கடந்த 1994ஆம் ஆண்டின் தொடக்கத்தில் டமாஸ்கஸ் அருகே நடந்த ஒரு கார் விபத்தில் பஸால் உயிரிழந்தார். அந்த நேரத்தில் பஷார் லண்டனில் கண் மருத்துவம் படித்துக் கொண்டிருந்தார்.

பஸாலின் மரணத்தைத் தொடர்ந்து, சிரியாவின் அதிபராவதற்கு பஷார் தயார்படுத்தப்பட்டார்.

எனினும், தற்போது ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதற்கும், லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்ததற்கும் காரணமான ஒரு மோசமான அதிபராக மாறியுள்ளார்.

இராணுவத்தில் இணைந்த அசாத்

29 வயதான பஷார் அல் அசாத் சிரியாவுக்குத் திரும்பி வடக்கு டமாஸ்க ஸில் உள்ள மிலிட்டரி அகாடமியில் ஐந்து ஆண்டுகளுக்குள் லெப்டினன்ட் கர்னலாக பணியாற்றினார்.

1999 ஜனவரியில் கர்னலாக பதவி உயர்வு பெற்றார். இந்த நேரத்தில், சாமானியர்களின் புகார்களைக் கேட்டறிந்து, ஊழலுக்கு எதிராக பிரச்சாரம் செய்து பிரபலமடைந்தார்.

2000ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி ஹபிசுல் அசாத் உயிரிழந்ததை தொடர்ந்து ஜூலை 11ஆம் திகதி பஷர் அல்-அசாத் சிரியாவின் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

தனது முதல் கொள்கை அறிக்கையில் பொருளாதார தாராளமயமாக்கலுக்கு முக்கியத்துவம் அளித்து, தனது நோக்கங்களைத் தெளிவாகக் கூறிய அவர், அரசியல் சீர்திருத்தங்களையும் அறிவித்தார்.

படித்த இளம் நபர் ஆட்சிக்கு வருகிறார் என்று பலரும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால் எதிர்காலம் அவர்களுக்கு வேறு விதமான திட்டங்களோடு காத்து இருந்தது. வந்தவர் சன்னி ஷியா பிரச்சனையை உருவாக்கினார்.

இரண்டாம் கட்ட இடத்தில் இருந்த சன்னி மக்கள் முற்றிலும் அகற்றப்பட்டார்கள். அரசின் அனைத்து பிரிவுகளிலும் ஷியா மக்கள் அமர்த்தப்பட்டார். இது மக்களுக்கு பெரிய அதிர்ச்சியை கொடுத்தது.

அவர் ஆட்சிக்கு வந்த பின்னர் 2006ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிரான பயணத் தடை நீட்டிக்கப்பட்டது. பலர் நாட்டை விட்டு வெளியேறுவதை நிறுத்திவிட்டனர். 2007 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில், சமூக ஊடகங்கள் தடை செய்யப்பட்டன.

**வழமையாகிப் போன கொலைகள்**

பஷார் அல்-அசாத்தின் அரசியல் எதிரிகள் சித்திரவதை செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதும், எரிப்பதும், காணாமல் போவதும், கொல்வதும் சகஜமானது.

2009ஆம் ஆண்டில் மனித உரிமைகள் சுட்டெண்ணில் சிரியா உலகில் மிக மோசமான இடத்திற்கு தள்ளப்பட்டது. தந்தை, மகன் 56 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்த போதிலும் நாட்டை முன்னேற்ற பாதைக்கு கொண்டுவர முடியவில்லை.

யாருக்கும் வேலை இல்லை. சரியான மருத்துவம் இல்லை. உணவு இல்லை என்று மூன்றாம் தர நாடாக சிரியா மாறி இருந்தது. இதை எதிர்த்துதான் போர் தொடங்கியது. இந்த போரில் இதுவரை 5,11,271 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும், பலரின் மரணம் குறித்த முறையான அறிவிப்பு வெளியாகவில்லை.

**அரபு வசந்தம்**

2011 இல் துனிசியா, எகிப்து, லிபியாவில் முன்னெடுக்கப்பட்ட அரபு வசந்த எழுச்சிகள் 15 ஆம் திகதி சிரியாவிலும் அலை வீசியது.

ஊழலை ஒழிக்கவும், அரசியல் கைதிகளை விடுவிக்கவும் பஷரின் பதவி விலகக் கோரி நாடு தழுவிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனாலும், அசாத் இராணுவத்தின் கொள்கை அடக்குமுறை காரணமாக ஆறு மாதங்களுக்குள் இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. போராட்டம் தீவிரமடைந்ததால் உயிரிழப்புகளும் அதிகரித்தன.

இதனால், துருக்கி, லெபனான் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளை நோக்கி சிரியா அகதிகள் ஓட்டமெடுத்தனர்.

2011 இறுதிக்குள், பஷர் அல்-அசாத் பதவி விலக வேண்டும் என்று கோரப்பட்டது. அரபு லீக் எனப்படும் அரபு நாடுகள் கூட்டமைப்பு சிரியாவை இடைநீக்கம் செய்தது.

2012 மார்ச்சில் அப்போதைய ஐ.நா பொதுச்செயலாளர் கோபி அன்னான் தயாரித்த அமைதி திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை ஒப்புதல் அளித்தது. ஆனால், இவை எதுவும் மோதலை குறைக்கவில்லை.

2012 இல், மோதல் ஒரு முழுமையான உள்நாட்டுப் போராக மாறியது. இதற்கு ஐக்கிய நாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம் தெரிவித்தன. பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டு பொதுமக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட அசாத் ஆட்சி உலகத் தலைவர்களிடமிருந்து கடுமையான விமர்சனங்களைப் பெற்றது.

2011 முதல் 2013 வரை, 70,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐ.நா தெரிவித்திருந்தது. பிப்ரவரி 2016 வரை, சிரிய உள்நாட்டுப் போரில் 500,000 பேர் கொல்லப்பட்டனர்.

மில்லியன் கணக்கான மக்கள் அகதிகளாக மாறினர். ஆனாலும், பஷர் அல்-அசாத் ஒரு எதேச்சதிகாரி என்பதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை.

**வாய்ப்பை சரியாக பயன்படுத்தி க்கொண்ட கிளர்ச்சியாளர்கள்**

இந்நிலையிலேயே, பஷர் அல் அசாத்துக்கு எதிராக ஹயாத் தஹ்ரிர் அல் ஹாம் என்ற அமைப்பின் தலைமையில் கிளர்ச்சியாளர்கள் போரை தொடங்கினர். இவர்கள் அலெப்போ, ஹமா உள்ளிட்ட நகரை கைப்பற்றினர்.

தொடர்ந்து கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வந்த சூழலில் பல இடங்களில் இராணுவத்தினர், கிளர்ச்சியாளர்களிடம் சரணடைந்தனர்.

இதன் உச்சகட்டமாக தலைநகர் டமாஸ்கஸை கிளர்ச்சிக் குழு கைப்பற்றிவிட்டது. இந்த கிளர்ச்சியின் மூலம் 54 ஆண்டுகள் நீடித்த அசாத் குடும்பத்தின் ஆட்சிக்கு கிளர்ச்சிக் குழு முடிவு கட்டிவிட்டது.

சிரியாவை ஆதரித்த ஈரான், ரஷ்யா நாடுகள் உக்ரைன் மற்றும் இஸ்ரேலுடனான மோதல்களில் கவனம் செலுத்த சிரியா கைவிடப்பட்டது.

இதனை சிறந்த வாய்ப்பாக பயன்படுத்திய கிளர்ச்சிக் குழு அடுத்தடுத்து சிரியாவின் நகரங்களைக் கைப்பற்றி அசாத் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது.

இந்நிலையில்அசாத் உள்ளிட்டோர் தப்பிச் சென்ற விமானம் திடீரென ரேடார் கண்காணிப்பில் இருந்து மாயமானதாக தகவல்கள் வெளியாகின.

மேலும் அசாத் பயணித்த விமானத்தை கிளர்ச்சிக் குழு சுட்டு வீழ்த்தியிருக்கலாம் இதில் அசாத் கொல்லப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அவர் தற்போது ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளதாக உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.






> **பஷார் அல்-அசாத்தின் அரசியல் எதிரிகள் சித்திரவதை செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதும், எரிப்பதும், காணாமல் போவதும், கொல்லப்படுவதும் சகஜமானது..!**





# வாக்குறுதிகளை அரசு மறந்துவிட்டது

அதிகமான ஆசனங்களைப் பெற்று, நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிய அரசாங்கம், ஆரம்பத்தில் IMF இணக்கப்பாடு குறித்து மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் அரசாங்கத்தினால் முன்னெடுத்து வரப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தலைமையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றும் போது:

எதிர்க்கட்சியில் இருந்தபோது IMF ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளை பேசினர். அதனை சரி செய்து புதிய ஒப்பந்தத்துக்கு செல்வதாக மக்கள் மத்தியில் வாக்குறுதியளித்தனர். ஆனால் அதிகாரத்துக்கு வந்த பின்னர் அந்த வாக்குறுதிகளை மீறியுள்ளனர் மக்களை ஏமாற்றும் செயலாகும். இது கடும் துரோக செயலாகும். நமது நாடு இருதரப்பு மற்றும் சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை ஆரம்பித்த போது அன்று இந்த கடன் மறுசீரமைப்பு மூலம் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படாது என்று ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் கூறியிருந்தன.

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பல விடங்களை பரிந்துரைத்தது.

அப்போது ஜே.வி.பியும் புதிய கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு புதிய வேலைத்திட்டத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவித்தது. தற்போது மக்களுக்கு நன்மை பயக்காத முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்னெடுத்த இணக்கப்பாட்டையே தொடர்ந்து வருகிறது என்று சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

# “இந்தியாவுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டும்”

பொருளாதார ரீதியில் நாடு பாதிப்படைந்தபோது, 4 பில்லியன் டொலரை அரசாங்கத்துக்கு வழங்கி மக்களை பட்டினியிலிருந்து பாதுகாத்த நாடு இந்தியாவே. எனவே, இந்தியாவுடன் அரசாங்கம் நெருக்கமான உறவைப் பேண வேண்டியது அவசியமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான, இரண்டாம் நாள் விவாத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில் யுத்தத்தில் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டபோது, இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் எமக்குப் பாரியளவில் உதவி செய்திருக்கின்றன. அதனால், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அந்த நாடுகளுடன் சிறந்த உறவைப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடுகள் இந்த நாட்டில் அரசியல் செய்ய வரவில்லை. நாடு வங்குரோத்தில் இருந்தபோது, எரிபொருளில்லாதபோது, பல்வேறு உதவிகளை இந்நாடுகளே வழங்கின. நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமானால், அதற்கான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவுள்ளோம். பழைய விடயங்களைத் தெரிவிப்பதற்கு நாடாளுமன்றத்தை அரசியல் மேடையாகப் பயன்படுத்தாமல், மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 10 அத்தியாவசியப் பொருட்களின் விலையை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்றார்.

# இலங்கையில் ஆரோக்கியமற்ற காற்றின் தரச் சுட்டெண்

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரச் சுட்டெண் நேற்று சற்று ஆரோக்கியமற்ற மட்டத்தில் இருந்ததாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு அறிவித்துள்ளது.



காலநிலை மற்றும் வடக்கு திசையிலிருந்து வரும் காற்றின் தன்மை என்பவற்றின் காரணமாக நாடுமுழுவதும் காற்றின் தரச்சுட்டெண் 90 முதல் 180 வரையான மட்டத்தில் நேற்றுக் காணப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் பொலன்னறுவை நகரங்களில் காற்றின் தர சுட்டெண் ஆரோக்கியமற்ற மட்டத்தில் காணப்பட்டதுடன்,

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தர சுட்டெண் சற்று ஆரோக்கியமற்ற மட்டத்திற்கு அதிகரித்துக் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சுவாச ரீதியான பாதிப்புகளைக் கொண்டுள்ளவர்கள் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம், நுவரெலியா, களுத்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய நகரங்களில் மாத்திரம் காற்று தரச்சுட்டெண் மத்திய மட்டத்தில் நிலவும் எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு அறிவித்துள்ளது.

# தலைவராக புத்தளம் ஷவ்வாப் தெரிவு



வியாபார முகாமைத்துவ பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறையில் சிறப்பு பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் புத்தளம் எம்.ஆர்.எம்.ஷவ்வாப் வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறையின் சந்தைப்படுத்தல் கழக தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

புத்தளம் எம்.ஆர்.எம்.ஷவ்வாப், ஆசிரியர் ஏ.சீ.எம்.ரிபாயிஸின் மகனுமாவார் .

# சிறுவனொருவனை பாலியல் வன்புணர்வுக்கு முயன்றவர்களுக்கு பிணை

சிறுவனொருவனை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற இரண்டு இளைஞர்களை வெல்லவாய அம்பகமுவ பொலிஸார் கைது செய்து பிணையில் விடுவித்துள்ளனர்.



இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது, 16 மற்றும் 18 வயதுகளையுடைய இருவர், சிறுவனின் உள்ளாடையை கழற்றி, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளனர். சிறுவன் அந்த நபர்களிடமிருந்து சாதுரியத்தனமாக தப்பிவந்து, தனக்கு நேர்ந்ததை கதியை, தன்னுடைய பெற்றோரிடம் தெரிவித்துள்ளான்.

உடனடியாக சம்பவம் தொடர்பாக சிறுவனின் பெற்றோர் வெல்லவாய அம்பகமுவ பொலிஸில் புகார் செய்துள்ளனர். அதன்பின்னர், அவ்விருவரையும் கைது செய்த அம்பகமுவ பொலிஸார், அவர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். கைது செய்யப்பட்ட இருவரும் வெல்லவாய நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (08) ஆஜர்படுத்தப்பட்ட போது, அவ்விருவரையும், தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

# கற்பிட்டியில் விழிப்பூட்டல் செயலமர்வுக் கண்காட்சி

எம்.யூ.எம்.சனூன்

பெண்கள் தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களில் காலநிலை நிதி மூலம் தாங்குதிறனை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களின் குரல்களை மேம்படுத்துவதற்கான திட்டம் தொடர்பான விழிப்பூட்டும் செயலமர்வுக் கண்காட்சி ஒன்று கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரஞ்சன் பியதாச, வானிலை அவதான நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரொசான் ஹேரத், சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றம் தொடர்பிலான ஆலோசனைக் குழுவின் தலைவர் ரஞ்சித் புண்ணியவர்தன மற்றும் நிகழ்ச்சி இணைப்பாளரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான சாமினி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி விழிப்பூட்டல் கண்காட்சியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் பத்து குழுக்களாக பிரிக்கப்பட்டனர். பின்னர் அவர்களுக்கான பத்து கருப்பொருள்களாக பெண்கள் தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தொழில்நுட்பத்தின் மூலம் கற்பிட்டி சுற்றுலா துறையை மாற்றி அமைத்தல் , கற்பிட்டியில் பெண்கள் நிதி அதிகாரமளித்தல் மூலம் காலநிலை சவால்களை எதிர்கொள்ள காலநிலை நிதி மூலம் பெண்கள் தலைமையிலான சேதன விவசாயத்தில் தாங்கு திறனை உருவாக்குதல், பெண்கள் தொடர்பான கைவினைப் பொருட்கள் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்தல், பெண்கள் தொடர்பான இயற்கை அடிப்படையிலான தீர்வு நடவடிக்கைகள் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களை வழி நடத்துதல், பெண்கள் தலைமையிலான கால்நடை பராமரிப்புக்கான நெகிழ்த்திறன் கொண்ட பண்ணை நடைமுறைகள், உலர் மீன் உற்பத்தி, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களை வழி நடத்தல் , நிலைபேறான மலர் வளர்ப்பு, கற்பிட்டியில் நீர் முகாமைத்துவ மூலம் பெண்களை வலுவூட்டல், பெண்கள் முன்னணி சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் தொடர்பான சொந்த உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன வழங்கப்பட்டு அதற்கு அமைவாக வரையப்பட்ட சித்திரங்களின் காண்காட்சியும் அதற்கான செயலமர்வு தெளிவூட்டல்கள் பல்கலைக்கழக மாணவர்களால் வழங்கப்பட்டது.

# “அடுத்த 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது”

## இதுதானா அரசின் கொள்கை என கேள்வி கேட்கிறார் மின் நுகர்வோர் சங்க தலைவர்

30%க்கு மேல் மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று தேர்தல் மேடையில் சொன்னவர்கள் தற்போது அடுத்த 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதானா தேசிய மக்கள் சக்தி கொள்கை என மின் நுகர்வோர் சங்க தலைவர் எம்.டி.ஆர். அதுல கேள்வி கேட்டுள்ளார்.



இதேவேளை, தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்தபோது மின் கட்டணத்தை குறைக்க வலியுறுத்தி தீபம் ஏற்றியதாகவும், ஆட்சி அமைத்து மின் கட்டணத்தை குறைக்காவிட்டால், தீப்பந்தம் ஏந்த தாம் தயார் என மின் நுகர்வோர் சங்க தலைவர் எம்.டி.ஆர். அதுல மேலும் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசு தேர்தலின் போது மின்கட்டணத்தை 30% குறைப்பதாக வாக்குறுதி அளித்ததை நினைவுகூர்ந்த அவர், அனைத்து மின் உற்பத்தி நிலையங்களிலும் நீர்மின்சாரத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால் விலை குறைப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார். மின் நுகர்வோர் சங்கத் தலைவர் எம்.டி.ஆர். அதுல நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அடுத்த 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசின் கொள்கைகள்தானா என்று சந்தேகிக்கிறேன்.

30%க்கு மேல் மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று தேர்தல் மேடையில் சொன்னார்கள். கடந்த காலங்களில் மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பாக, மின்சார சபை, பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு, முன்மொழிவுகளை அனுப்பியது.

அங்கு ஆறு சதவீதம் கட்டணத்தை குறைக்க அனுப்பினர். இது போதாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவித்தது. அதனால்தான் மீண்டும் ஆலோசனைகளைக் கேட்டேன். இப்போது வாக்குறுதிகளை நிறைவேற்றவும், மின் கட்டணத்தை குறைக்கவும் சொல்கிறோம் எனக் குறிப்பிட்டார்.

# மூதூர் விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டம்

சீரற்ற காலநிலையால் பெய்த கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் சுமார் 2000 ஏக்கர் வேளாண்மைச் செய்கை அழிவடைந்துள்ளதாகவும் அரசாங்கம் தமக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தி மூதூர் விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் –பச்சநூர் சந்தியில் நேற்று திங்கட்கிழமை இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.இதனை மூதூர் கமநல சேவைப் பிரிவிலுள்ள விவசாய சம்மேளனங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தது.



அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் மூதூர் கமநல சேவை பிரிவில், சுமார் 2000க்கும் மேற்பட்ட ஏக்கர் வேளாண்மைச் செய்கை அழிவடைந்து பாதிக்கப்பட்டுள்ளது.

மூதூர் கங்குவேலி திருக்கரை விவசாய சம்மேளனப் பிரிவில் யாருடைய அனுமதியுமின்றி புதிய வாய்க்கால் தோண்டப்பட்டமையால் கங்குவேலி குளத்திலிருந்தும், மேட்டுநில பரப்பிலிருந்தும் மேலதிக நீர் தமது வேளாண்மை நிலங்களுக்குள் வந்தமையால் சுமார் 2000 ஏக்கர் வேளாண்மை அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும், அனுமதியின்றி வெட்டப்பட்ட வாய்க்காலை மூட வேண்டுமென விவசாயிகள் தெரிவித்தனர்.

# விவசாயிகளின் உற்பத்தி செலவினை அரசாங்கம் குறைக்க வேண்டும்

## தேசிய கமக்காரர் அதிகார சபையின் தலைவர் திலக் பண்டார

விவசாயிகளின் உற்பத்தி செலவினை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்பதுடன் பதுக்கிவைக்கப்பட்டுள்ள நெல்லை வெளியில் கொண்டுவருவதன் மூலம் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டை நீக்க முடியும் என தேசிய கமக்காரர் அதிகார சபையின் தலைவர் திலக் பண்டார தெரிவித்தார். தேசிய கமக்கார அதிகார அதிகார சபையின் ஊடக சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது தேசிய கமக்கார அதிகார அதிகார சபையின் தலைவர், பொருளாளர், உப செயலாளர் உள்ளிட்ட தேசிய அதிகார சபையின் நிறைவேற்று குழு உறுப்பினர்களும் மட்டக்களப்பு மாவட்ட தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

இது தொடர்பில் தேசிய அதிகார சபையின் தலைவர் மு.மு.து.திலக் பண்டார கருத்து தெரிவிக்கையில், விவசாயிகளாகிய எங்களை அறியாமல் அரசினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் நாங்கள் கவலை தெரிவிக்கின்றோம்.

மட்டக்களப்பில் 2 இலட்சம் ஏக்கர் விதைத்திருந்தாலும் அதில் 1 1/2 இலட்சத்திற்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இன்னமும் மட்டக்களப்பில் வெள்ள நீர் வயல்களில் இருந்து



வடிந்தோடவில்லை. இதுவரை பழமையான சுற்றுநிருபத்தை வைத்தே நஷ்டஈடுகளை வழங்க தீர்மானித்துள்ளமை கவலை அழிக்கின்றது.இவர்கள் பசளை உள்ளிட்ட பல விடயங்களுக்கு அதிக பணத்தினை செலவழித்தாலும் இவர்களுக்கு வழங்கும் நஷ்டஈடு போதுமானதாக இல்லை என நாம் அரசிற்கு அறியத்தருகின்றோம். ஏக்கருக்கு 8 ஆயிரம் போதுமானதாக இல்லை. சில இடங்களில் வயல்களில் மண் மூடியிருக்கின்றது.வெள்ள நீர் வடியவில்லை அதை நாம் நேரடியாக காண்கின்றோம். விவசாயிகளுக்கு எதிராக மடு கிண்ட நினைக்க வேண்டாம் என அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

டட்லி முதலாளி போன்றோர்களை வைத்து விலை தொடர்பில் கதைத்தார்கள், ஜனாதிபதி பல கருத்துக்களை சொன்னாலும், ஒழித்து வைக்கப்பட்டுள்ள நெல்லை வெளியில் கொண்டு வர முடியும். வெட்டும் நாட்கள் வரும் போது நெல் குறைந்த விலையிலேயே எடுக்கப்படுகின்றது. உற்பத்தி விலையை குறைப்பதற்கான ஏற்பாட்டினை அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேசிய அதிகார சபையின் உப செயலாளர் தக்சில தேசப் பிரிய கருத்து தெரிவிக்கையில், மரத்தால் விழுந்தவனை மாடு மிதிப்பது போலவே தற்போது விவசாயிகளின் நிலை காணப்படுகின்றது.

நாங்கள் விவசாய அமைச்சிற்கு ஒரு கோரிக்கையினை முன்வைக்கவுள்ளோம் அதனை வழங்கி 7 நாட்களில் எமக்கு தீர்வு கிடைக்காவிடின் விவசாயிகள் நாங்கள் யார் என்பதை அரசுக்கு காட்டுவோம்.

கடன்பட்டு வயல் செய்த விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சரை கேட்டுக் கொள்கின்றோம்.விவசாயிகளுடன் கலந்துரையாட அரசாங்கத்தை நாங்கள் அழைக்கின்றோம். ஒரு இலட்சம் நஷ்ட ஈட்டினை நாங்கள் விவசாயிகளுக்கு எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## அனர்த்தத்தில்

# உயிர் நீத்தவர்களுக்கு சர்வமத பிரார்த்தனை





கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வெள்ள அனர்த்தத்தினால் உயிர் நீத்த உறவுகளுக்கான ஆத்மா சாந்தி வேண்டி சர்வமத பிரார்த்தனை நிகழ்வு நேற்று அதன் தலைவர் சிவஸ்ரீ க.வி.பிரமீன் ஐயா தலைமையில் காரைதீவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சர்வ மத மதகுருமார்கள், ஜனாதிபதியின் பணிப்புரையின் பெயரில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தன, மேலதிக அரசாங்க அதிபர் சிவ ஜெயராஜன், கல்முனை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணன், திடீர் மரண விசாரணை அதிகாரி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.ஜெயராஜ், முன்னாள் அரசாங்க அதிபர்கள், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபுல் சாணக, ஆலய பரிபாலன சபையினர், இந்துமா மன்ற உறுப்பினர்கள், உலமா சபைகளின் நிர்வாகிகள், ராவணா அமைப்பினர், உயிர் நீத்த உறவுகளின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். சர்வமத தலைவர்களின் பிரார்த்தனையோடு ஆரம்பமான நிகழ்வில் அதிதிகள் உரையை தொடர்ந்து அனைவரும் இணைந்து அகல் விளக்குகளில் தீபச்சுடரேந்தி அனர்த்தத்தின் போது உயிர் நீத்த உறவுகளின் ஆத்மா சாந்தி அடையவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறாமல் பாதுகாக்கவும் பிரார்த்தனைகள் இடம்பெற்றதோடு, உயிர்களை காக்க களப்பணி செய்த வீரர்களும் நினைவுகூரப்பட்டனர்.

இனம் மதம் மொழிகளுக்கு அப்பால் மனிதநேயமும் அன்பும் உடையவர்களாக நல்லிணக்கத்தோடு எதிர்கால சந்ததியை கட்டியெழுப்புவதற்காகவே இந்நிகழ்வானது கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் முழுமையான ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

## கரையோர பிரதேசங்களுக்கான

# வழமைக்கு திரும்பிய குழாய் நீர் விநியோகம்

**(முகம்மட் முக்தார்)**

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமாகிய நீர்வழங்கல் குழாய்களுக்கு பதிலாக புதிய குழாய்கள்மீளவும் பொருத்தப்பட்டு நீர்விநியோகம் நேற்றுமுன்தினம் (08) முதல் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அம்பாறை கரையோர பிரதேசங்களுக்கான பிரதி முகாமையாளர். எந்திரி ஏ.எம்.ஹைதர் தெரிவித்தார்.

மேற்படி குழாய்கள் சேதமாகியதால் கடந்த 08 நாட்களுக்கு மேலாக நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்களுக்கான நீர்விநியோகம் சீரற்ற நிலையில் காணப்பட்டது. அழுத்தம் குறைந்த மட்டுப்படுத்தப்பட்ட குழாய் நீர் விநியோகம் இடம்பெற்றமையால் மாடிவீடுகளில் குடியிருப்போரும் சாதாரண வீடுகளில் குடியிருப்போரும், அரச நிறுவனங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கின என்பது குறிப்பிடத்தக்கது.

கொண்டவட்டுவான் குளத்திலிருந்து நிந்தவூர் அல்லிமுல்லையில் அமைக்கப்பட்டுள்ள நீர்நிரப்பும் நிலையத்திற்கு நீரை கொண்டுவரும் பாரிய குழாய்கள் வெள்ள நீரால் தூள்,தூளாக உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வொலிவேரியனில்

# கர்ப்பிணிகளுக்கான பொதிகள் வழங்கல்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**



சாய்ந்தமருது வொலிவேரியன் கிராம கர்ப்பிணித் தாய்மார் களுக்கு பிரசவத்திற்குத் தேவையான பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை (09) இடம் பெற்றது.

கண்டி விங்ஸ் ஹிமனிரி (Kandy wings of humanity) அமைப்பின் அனுசரணையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், அமைப்பின் பிரதிநிதிகளான திருமதி ராஷிதா, எம். என்.எம். நௌஸாத், பொதுச் சுகாதார தாதிய சகோதரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது, பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான பிரசவத்திற்கு உரிய பொருள்கள் அடங்கிய பொதிகள் கையளித்து வைக்கப்பட்டதுடன் அவர்களுக்குத் தேவையான ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வும் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் முன்னாள் பிரதேச செயலாளருக்கு பாராட்டு







**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி அண்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதவி உயர்வு பெற்று சென்றதையும்,கல்முனை பிராந்தியத்தில் செய்த சேவையையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கல்முனை மைமூனா சமூக சேவை அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சமூர்த்தி திட்ட முகாமையாளர் என்.எம் நௌசாத் தலைமையில் கல்முனை கிரீன்பீல்ட் மைமூனா அரபுக் கலா பீடகாரியாலயத்தில் இடம்பெற்றது.

பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரான ஜே.லியாக்கத் அலி கல்முனை பிராந்தியத்தில் சுமார் ஏழு வருடங்கள் மாநகர ஆணையராகவும்,நான்கு வருடங்கள் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி மக்களுக்கு பல சேவைகளை செய்தவர். இவற்றை நினைவுகூர்ந்து பலரும் இங்கு பேசினர். இந்த கௌரவிப்பு நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், கல்முனை பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள்,அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபை கல்முனை கிளைத் தலைவர், பொது நிறுவனங்களின் தலைவர்கள் அதன் உறுப்பினர்கள்,விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தினை சேர்ந்த ஜே.லியாக்கத் அலி, இதற்கு முன்னர் காரைதீவு,சம்மாந்துறை பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும்,ஓட்டமாவடி, அட்டாளைச்சேனை,கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும்,கல்முனை மாநகர சபையில் ஆணையராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுமான வேலை தளத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கடை ஒன்றின் கட்டுமான வேலை தளத்தில் இடம்பெற்ற அனர்த்தம் ஒன்றில் இளம் குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடைத் தொகுதியில் வேலையில் ஈடுபட்டவர்கள் சிக்கிக் கொண்ட அனர்த்தம் ஒன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்ததுள்ளார். மற்றுமொருவர் காயங்களுடன் மீட்கப்பட்டு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் நேற்றையதினம்(8) மாலை சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல், சடலத்தை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டதுடன் பின்னர், சடலம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக எடுத்து செல்லப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் மரண விசாரணை நடவடிக்கையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணம் மூச்சு திணறல் காரணமாக ஏற்பட்டதா? அல்லது வேறு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதா என்பதை கண்டறிய கொழும்பில் உள்ள பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சடலத்தின் சில பகுதிகள் சான்றிதழுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மரணமடைந்த இளம் குடும்பஸ்தரை காப்பாற்றுவதற்காக உடனடியாக செயற்பட்ட மாவடிப்பள்ளி பகுதியைச் சேர்ந்த மற்றுமொருவர் காயமடைந்து அபாயக் குரல் எழுப்பிய நிலையில் ஏனையோரால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸாரின் புலன் விசாரணை மற்றும் அம்பாறையில் இருந்து வரவழைக்கப்பட்ட பொலிஸ் தடயவியல் (சோகொ) பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வேவல்வத்தை நீர்மின் திட்டம் இடைநிறுத்தம்




(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரி வேவல்வத்தை மேல் கதுருகல்தொல நீர்மின் திட்டத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபை இடை நிறுத்தியுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவித்தார்.

கதுருகல்தொல சுதர்ஷனாராம விகாரையில் சனிக்கிழமை (7) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர்,

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2024.12.06 ஆம் திகதி இடப்பட்டுளள 14/1/540/2024 கொண்ட கடிதத்தின் பிரகாரம் மேற்படி நீர்மின் திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி திட்டம் ஒரு தனியார் நிறுவனத்தின் (எஸ்.என்.ஹய்டோ பவர் பிரைவட் லிமிட்டெட்) மூலம் 02 மெகாவாட் நீர்மின் உற்பத்தி செய்யும் நோக்குடன் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2024.12.06 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தனியார் நிறுவனத்தின் (எஸ்.என்.ஹய்டோ பவர் பிரைவட் லிமிட்டெட்) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் மேற்கொண்ட நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்படி திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த திட்டத்திற்கு எதிராக பம்ரபொட்டுவ சுற்றாடல் பாதுகாப்பு ஒன்றியம் மற்றும் பல்வேறு சுற்றாடல் அமைப்புகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதுடன் பாடியஓய நீர் வீழ்ச்சி, மதனகிரி நீர்வீழ்ச்சி மற்றும் 05 மீற்றருக்கு குறைவான 10 நீர் விழ்ச்சிகள் இந்த நீர்மின் திட்டத்தினால் முற்றாக அழிந்துவிடும்.

இக் காரணங்களை கொண்டு கடந்த சில வருடங்களாக பிரதேச மக்கள் பல்வேறு போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வந்துள்ளனர்.

# தாய், சிறுவனை தாக்கியவர் கைது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பகுதியில் தாயையும், 13 வயது மகனையும் கொடூரமாக தாக்கிய நபர் ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவனை பிரிந்த குறித்த தாயும் மகனும் தனியாக வசித்து வந்துள்ளனர். இதன்போது பளை பகுதியை சேர்ந்த சந்தேகநபர் அராலி பகுதியில் உள்ள அவரது சகோதரி வீட்டிற்கு வந்திருந்தபோது, அவருக்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்ட நிலையில் குறித்த பெண்ணின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

அங்கு தங்கியிருந்த சில மாதங்களின் பின்னர் அந்த வீட்டினை தனது பெயருக்கு எழுதி தருமாறு கூறி குறித்த பெண் மீதும், பெண்ணின் மகனான சிறுவன் மீதும் தாக்குதல் நடத்தி வந்துள்ளார். அந்த வகையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தாக்குதலினால் அந்த பெண்ணுக்கு தலையில் பாதிப்பு ஏற்பட்டு மனநலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

சந்தேக நபர் தனது தாக்குதல் மூலமே அந்த பெண்ணுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாக அயல்வீட்டாருக்கு கூறியுள்ளார். அதன் பின்னர் அந்த பெண் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை சிறுவன் மீதும் தாக்குதல் நடாத்தி, சிறுவனை வீட்டை விட்டு துரத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த வேளை, சிறுவனை மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியுள்ளனர். இதன்போது, அந்த சிறுவனை சிறுவர் இல்லத்தில் சேர்ப்பிக்குமாறும், சந்தேக நபரை கைது செய்யுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்த வகையில் பளை பகுதியில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபர் மீண்டும் நேற்று அராலி பகுதிக்கு வந்திருந்தவேளை வட்டுக்கோட்டை பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின்போது அவர் ஐந்துக்கும் மேற்பட்ட திருமணங்கள் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# பிரதேச ஒருங்கிணைப்பு தலைவராக பிரதி அமைச்சர் பிரதீப் நியமனம்



இரத்தினபுரி மாவட்ட கொடகவெல பிரதேச செயலக பிரிவின் கொடகவெல, ஒபநாயக்க,வெலிகபொல பிரதேசங்களை உள்ளடக்கி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவராக பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நியமிக்கப்பட்டுள்ளார். நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்ட தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக 112,711 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் தெரிவாகிய சுந்தரலிங்கம் பிரதீப், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டுள்ள நிலையில், அவரை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவராக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார். இவ் நியமனத்தைப் பெற்றுக் கொண்ட இரத்தினபுரி மாவட்டத்தின் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பிரதி அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

”கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் “மாற்றான் தாய் மனப்பான்மையோடு“ சேவைகளை மேற்கொண்டன. இனிவரும் காலங்களில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளின் அடிப்படையில் தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்புடையதாகப் பிரதேச மட்டத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சகல அபிவிருத்தி பணிகளையும் ஒருங்கிணைப்பு செய்வேன். சகல மக்களுக்கும் இன,மத,மொழி,பிரதேச பேதங்களைக் கடந்து சேவை செய்ய உறுதி பூண்டுள்ளேன்” என அவர் தெரிவித்தார்.

# மேல்மாகாண நூலக சேவையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கவும்

## சங்கத் தலைவர் தெரிவிப்பு



மேல்மாகாண நூலக சேவையாளர்கள் பதவி உயர்வு உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதால் அப் பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசாங்கம் தீர்வு காணும் என நம்புவதாக மேல்மாகாண நூலக சேவையாளர்களின் சங்கத்தின் தலைவர் ஹசித பிரதீப் தரங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு பதவி உயர்வுகள் வழங்குவதற்காக நடத்தப்பட்ட போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் ஆறு மாதங்கள் கடந்தும் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சங்கத்தின் இரண்டாவது பொது மாநாட்டின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக மேல்மாகாண நூலக ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்பான அமைச்சருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும், இது தொடர்பில் எதிர்காலத்தில் அமைச்சருடன் கலந்துரையாட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பதவி உயர்வு இல்லாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து கடந்த அரசாங்க அதிகாரிகளிடம் தெரிவித்த போதும் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என தரங்க தெரிவித்தார்.


மேலும், மேல் மாகாணத்தில் 130க்கும் மேற்பட்ட நூலக பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், ஏற்கனவே அந்த பதவிகளில் பணிபுரியும் சங்க உறுப்பினர்கள் தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதால், அரசாங்கம் தலையிட்டு விரைவில் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.




புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளை மற்றும் கிறின்சேனல் கல்வி நிலையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த புதிய வானம் விருது வழங்கும் விழா கடந்த ஞாயிறன்று ஹொரணை ரந்தார மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் கலை இலக்கியம் மற்றும் ஊடகத்துறையை சார்ந்த 50 பேருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. புதிய அலை கலை வட்டத்தின் நிறுவனர் ராதாமேத்தா தலைவர் சண்மு மற்றும் மகளிர் அணியின் செயலாளர் ஷஹானா மதுசூதன் ஆகியோர் விருது பெறுவதை படங்களில் காணலாம்.

# முன்பள்ளி மாணவர்களின் விடுகைவிழாவும், நத்தார் நிகழ்வும்







மட்டக்களப்பு கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையினால் நடாத்தப்பட்ட, முன்பள்ளி மாணவர்களின் விடுகை விழாவும், நத்தார் நிகழ்வும் மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் சேகர முகாமைக்குரு அருட் கலாநிதி. மு. து . அருள்ராஜா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மாணவர்களின் கலைநிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(படங்கள் : கு.குணறுபேஸ்)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவரை கைது செய்தபோது வவுனியாவில் குழப்பம்

வவுனியாவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரை பொலிஸார் கைது செய்த நிலையில் அந்த பகுதியில் பதற்றமான நிலைமை, நேற்று (09) மாலை நடந்துள்ளது.

வவுனியா நீதிமன்றிற்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் அங்கு நிற்பதைப் அவதானித்த வவுனியா பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்தனர். இதன்போது அந்த பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

எனினும், கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதேவேளை கைது நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டபோது அந்த பகுதியில் அலைபேசியில் ஒளிப்படம் எடுத்து, குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில், மேலும் இரண்டு பேரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை, விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மாவா போதைப் பொருள் வைத்திருந்தவர் கைது



நுவரெலியா உடப்புசல்லாவ பிரதான வீதியில் விக்டோரியா பூங்கா பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக உள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் இரவு மாவா போதைப்பொருளை விற்பனை செய்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து குறித்த கடையில் மறைத்து வைத்திருந்த 4 கிலோ 200 கிராம் மாவா போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த சந்தேக நபர் நானுஓயா பகுதியை சேர்ந்த 28 வயதுடையவர் எனவும் அவரை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

சட்ட விரோதமான முறையில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஊடகர் ஸுபைரின் தந்தை காலமானார்

(எம்.ஏ.அமீனுல்லா)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் (SLBC) நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அறிவிப்பாளருமான ஶ்ரீ.எம்.எம்.ஸுபைரின் தந்தை எஸ்.காதர் மீரா காலமானார்.

அன்னாரது ஜனாஸா கடந்த (06) வெள்ளிக்கிழமை,மஸ்ஜிதுல் அஸ்ஹர் ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.




# சிரியாவில் உள்ள இந்திய தூதரகம் தொடர்ந்தும் செயற்பாடு




சிரியாவினை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிய பின்னர், இரண்டு தசாப்த கால ஜனாதிபதி பஷர் அல்.

ஆஸாத்தின் ஆட்சிவீழ்ச்சி கண்டுள்ள போதிலும், இந்திய தூதரகம் தொடர்ந்தும் செய ல்பட்டு வருகிறது. இந்திய தூதரகம் அனைத்து இந்திய நாட்டவர்களுடனும் தொடர்பில் இருப்பதாக ஆதாரங்கள் ஞாயிற்றுக்கிழமை(08) தெரிவித்தன.

அங்குள்ள அனைத்து இந்திய பிரஜைகளும் பாதுகாப்பாக இருப்பதாகவும், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டில் இந்திய மக்களுக்கு உதவ தூதரகம் தொடர்ந்து இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

"இந்திய தூதரகம் சிரியாவின் டமாஸ்கஸில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தூதரகம் அனைத்து இந்திய பிரஜைகளுடனும் தொடர்பில் உள்ளது, அவர்கள் பாதுகாப்பாக உள்ளனர். சிரியாவில் உள்ள இந்திய பிரஜைகளுக்கு உதவ தூதரகம் உள்ளது" என ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை(08) சிரிய கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸிற்குள் நுழைந்த பின்னர், சிரியாவின் நிலைமை மற்ற அனைத்து நாடுகளுக்கும் ஒரு மைய புள்ளியாக அமைந்தது.

சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹோம்ஸை, நாட்டின் வடக்கே கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதையடுத்து வெள்ளிக்கிழமை(06) இந்திய அரசாங்கம் சிரியாவுக்கான பயண ஆலோசனையை வெளியிட்டது. "சிரியாவில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இந்தியப் பிரஜைகள் சிரியாவுக்கான அனைத்து பயணங்களையும், மறு அறிவிப்பு வரும் வரை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்" என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தற்போது சிரியாவில் உள்ள இந்தியர்கள் டமாஸ்கஸில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தங்கள் அவசர உதவி எண் (வாட்ஸ்அப்பிலும்) மற்றும் புதுப்பிப்புகளுக்கு மின்னஞ்சல் **Ib hoc.damascus@mea.gov.in** இல் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முடிந்தவர்கள் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் தங்கள் பாதுகாப்பு குறித்து மிகுந்த முன்னெச்சரிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என இந்திய தூதரகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டெல்லியில்

# 40 பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்!



இந்தியாவின் தேசிய தலைநகரில் அமைந்துள்ள 40 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்ததாக டெல்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதர் மேரிஸ் பாடசாலை, பிரிட்டிஷ் பாடசாலை, சல்வான் பப்ளிக் பாடசாலை, டெல்லி பப்ளிக் பாடசாலை மற்றும் கேம்பிரிட்ஜ் பாடசாலை உள்ளடங்கலாக பல பாடசாலைகளுக்கு இவ்வாறு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அந்த மிரட்டல் மின்னஞ்சலில்,

"நான் பாடசாலை கட்டிடங்களுக்குள் பல வெடிகுண்டுகளை வைத்தேன். வெடிகுண்டுகளின் அளவு சிறியதாகவும், நன்றாக மறைக்கப்பட்டதாகவும் உள்ளது.

இதனால் கட்டிடத்திற்கு அதிக சேதம் ஏற்படாது, ஆனால் வெடிகுண்டுகள் வெடிக்கும்போது பலர் காயமடைவார்கள். வெடிப்பைத் தடுக்க 30,000 அமெரிக்க டொலர்கள் தொகையைக் கோருவதாகவும்" குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பாடசாலை நிர்வாகங்கள் துரித நடவடிக்கை எடுத்து மாணவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது. டெல்லி பொலிஸார் தீயணைப்பு துறையினர், மோப்ப நாய் படை, வெடிகுண்டு கண்டறியும் குழுவினர் மற்றும் உள்ளூர் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து பாடசாலைகளில் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். எனினும் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எவையும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ரோகினியின் வெங்கடேஷ்வர் குளோபல் பாடசாலைக்கு மின்னஞ்சலில் வெடிகுண்டு மிரட்டல் வந்த ஒரு வாரத்துக்கு பின்னர் இந்த அச்சுறுத்தல் வந்துள்ளது. அண்மைய மாதங்களில், பல இந்திய விமான நிறுவனங்கள், ஹோட்டல்கள், ரயில் நிலையங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துள்ளன. அவை அனைத்தும் போலியான அச்சுறுத்தல்கள் ஆகும். 2023 இல் 122 ஆக இருந்த விமான நிறுவனங்களுக்கு வந்த மிரட்டல் அழைப்புகளின் எண்ணிக்கை 2024-இல் 994 ஆக உயர்ந்துள்ளது, இது 714.7 சதவீத அதிகரிப்பாகும் என சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் முரளிதர் மொஹோல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் புகாருக்கு உள்ளானவர்கள் விடுதலை; எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்



மனநலம் பாதிக்கப்பட்ட மாணவியை பாலியல் வன்கொடுமை செய்தவர்களை விடுதலை செய்த பொலிஸுக்கு அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்த மனநலம் குன்றிய கல்லூரி மாணவியை 10 இற்கும் மேற்பட்டோர் தொடர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை புகார் அளித்த நிலையில், வழக்கம்போல் பொலிஸுக்கு மிக அலட்சிய போக்குடன் செயல்பட்டுள்ளது. புகாரளித்தவர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து புகார் வந்தால், அதன் தீவிரத்தன்மையை உணர்ந்து முறையாக விசாரிக்க வேண்டும் என்பதுகூட பொலிஸுக்கு தெரியாதா? பெண்களுக்கு எதிரான வழக்குகளை மெத்தனப் போக்குடன் கையாளும் திமுக அரசுக்கு எனது கண்டனங்கள் என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை அயனாவரம் பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவியை 7 பேர் கொண்ட கும்பல் கடந்த பல மாதங்களாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய செய்தி மிகுந்தஅதிர்ச்சி அளிக்கிறது. இதுகுறித்து மாணவியின் தந்தை, அயனாவரம் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தும், குற்றவாளிகளுக்கு எச்சரிக்கை மட்டும் அளித்து, விடுதலை செய்திருக்கின்றனர். பாலியல் வன்முறை குறித்த புகாருக்கு உள்ளானவர்களை விடுதலை செய்யும் அதிகாரத்தை பொலிஸுக்கு யார் கொடுத்தது? இந்த சம்பவம் குறித்து முதல்வர் எதுவும் தெரிவிக்காதது ஏன்? இதற்கு முதல்வர் விளக்கமளிக்க வேண்டும் என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பிரேமலதா தெரிவிக்கையில் பாலியல் குற்றவாளிகளை விடுவிக்கும் அதிகாரத்தை பொலிஸுக்கு யார் கொடுத்தது? விலங்குகளைவிட மிகவும் கீழ்த்தரமாக, மனநலம் பாதிக்கப்பட்ட மாணவியை பாலியல் வன்கொடுமை செய்தகயவர்களை இந்த நாடும் மன்னிக்காது, தமிழக மக்களும் மன்னிக்க மாட்டார்கள் என்றார்.

தமாகா தலைவர் ஜி.கே.வாசன் மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் மீது பாலியல் வன் கொடுமையில் ஈடுபட்ட குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து, சிறையில் அடைத்து அவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுத்தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது தமிழக அரசின் கடமை. ஆனால், குற்றவாளிகளை எச்சரித்து அனுப்பிய பொலிஸார் நடவடிக்கைகள் முறையானதாக இல்லை. பொலிஸார் மீது தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் குறிப்பிடுகையில் மனநலம் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவரை ஓராண்டுக்கும் மேலாக அடையாளம் தெரியாத கும்பல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியிருப்பது, தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் சர்வ சாதாரணமாகி வருவதையே வெளிப்படுத்துகிறது. இந்த கும்பலை சேர்ந்த அனைவரையும் கைது செய்து கடுமையான தண்டனையை பெற்றுத்தர வேண்டும் என்றார்.

# சோனியா காந்தி பிறந்தநாள்; தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி பிறந்தநாளை முன்னிட்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில், "பெரும் சவால்களை எதிர்கொண்டு முன்னேறி, மேன்மைப்பண்பு கொண்ட தலைவராகத் தொடர்வது என அவரது வாழ்க்கைப் பயணமானது போராட்டக்குணத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாகத் திகழ்கிறது. வெற்றியும் அமைதியும் நிறைந்து - நீண்டகாலம் அவர் நல்ல உடல்நலத்துடன் திகழ வாழ்த்துகிறேன்." என குறிப்பிட்டுள்ளார்.

# காஷ்மீரை தனிநாடாக்க விரும்பும் அமைப்புடன் சோனியாவுக்கு தொடர்பு

## பா.ஜ.க குற்றச்சாட்டு

காஷ்மீரை தனி நாடாக்க வேண்டும் எனக்கூறும் அமைப்புடன், காங்கிரஸ் தலைவர் சோனியா தொடர்பில் உள்ளதாக பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) குற்றஞ்சாட்டியுள்ளது.

எப்.டி.எல், ஏ.பி, எனப்படும் ஆசிய பசிபிக் ஜனநாயக தலைவர்கள் மன்றத்தின் துணை தலைவராக, முன் னாள் காங்கிரஸ் தலைவர் சோனியா உள்ளார். இந்த அமைப்புக்கு அமெரிக்க தொழில் ஜனாதிபதி ஜார்ஜ் சோரசின் தொண்டு நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. எப்.டி.எல்., - ஏ.பி., அமைப்பு, காஷ்மீரை தனி நாடாக்க வேண்டும் என விரும்புகிறது. இந்த அமைப்புடன் சோனியா தொடர்பு வைத்திருப்பது, இந்தியாவின் உள் விவகாரங்களில் வெளி நாட்டு நிறுவனங்களின் செல்வாக்கையும், அத்தகைய தொடர்புகளின் தாக்கத்தையும் வெளிப்படுத்துகிறது என பா.ஜ.க தனது சமூக வலைத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

சோனியா தலைமையில் செயல்படும் முன்னாள் பிரதமர் ராஜிவின் தொண்டு நிறுவனம், ஜார்ஜ் சோரஸ் நிறுவனத்துடன் கூட்டு வைத்துள்ளது.

சோரஸ் நிதியுதவி அளிக்கும் ஓபன் சொசைட்டி தொண்டு நிறுவனத்தின் துணைத் தலைவரான சலீல் ஷெட்டி, ராகுலின் பாரத ஒற்றுமை அமைதி யாத்திரையில் அவருடன் சேர்ந்து பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரூ.3 இலட்சத்துக்கு விற்பனையான பந்தய சேவல்



ஆந்திரா மாநிலத்தில் பொங்கல் பண்டிகைக்காக பந்தய சேவல் விற்பனை தொடங்கியுள்ளது. ஒவ்வொரு சேவலும் ஆன்லைனில் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.3 இலட்சம் இந்திய ரூபாய் வரை விற்க ஆரம்பித்துள்ளது. ஆந்திராவில் பொங்கல் பண்டிகை வந்தால் தொடர்ந்து 3 அல்லது 4 நாட்களுக்கு கோதாவரி மாவட்டங்களில் சேவல் பந்தயங்கள் களை கட்டுவது வழக்கம். இதற்கு இந்த ஆண்டும் விதி விலக்கல்ல எனும் வகையில் இப்போதே சேவல் விற்பனை தொடங்கிவிட்டது. வெளிநாடு வாழ் இந்தியர்களும் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர்களும் ஆன்லைன் மூலம் சேவல்களை வாங்க ஆரம்பித்துவிட்டனர்.

இதற்காகவே கிழக்கு, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் பல ஊர்களில் பந்தய சேவல் பண்ணைகள் உருவாகி உள்ளன. இந்த சேவல்களை வீடியோ கால் மூலம் பார்த்து வாங்குபவர்களும் அதிகரித்து வருகின்றனர். பொங்கல் பண்டிகைக்கு சேவல் பந்தயங்கள் இந்த ஆண்டு கோதாவரி மாவட்டங்களில் மட்டும் ரூ.500 கோடி இந்திய ரூபாய் வரை நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பொலிஸார் இதற்கு தடை விதித்தாலும் சேவல் பந்தயங்களை ஆரம்பித்து வைப்பதே எம்.பி. அல்லது எம்எல்ஏவாக இருப்பதால் பொலிஸார் இதற்கு பாதுகாப்பு கொடுக்கும் நிலையே தொடர்ந்தும் காணப்படுகிறது.

சேவல் பந்தயத்திற்காக கோதாவரி மாவட்டங்களில் தற்போது சுமார் 400 சேவல் பண்ணைகள் உருவாகி உள்ளன. இதில், சண்டை குணம், உடல் வாகு, உயரம், நிறம், காலின் பலம் போன்றவ ற்றை பார்த்து சேவல்கள் முன்பதிவு செய் யப்படு கின்றன. சேவலில் நெமிலி, அப் ராஸ், பிங்களா, மைலா, டேகா, பச்சி காக்கி, ரசங்கி, நீத்துவா போன்ற இனங்கள் உள்ளன. இந்த வகை சேவல்களை பந்தய ங்களுக்காக தயார்படுத்தி வருகி ன்றனர். இவற்றுக்கு பாதாம், வேக வைத்த மட்டன், முந்திரி, கேழ்வரகு, கம்பு போன்றவை வழங்கப்படுகின்றன. இது தவிர, அஸ்வகந்தா பொடி, பி-காம்ப்ளக்ஸ் மாத்திரைகள் தண்ணீரில் கலந்து கொடுக்கப்படுகிறது. சொல்லப்போனால் பெற்ற பிள்ளை யை வளர்ப்பது போல் இந்த சேவல்களை பார்த்து, பார்த்து வளர்க்கின்றனர். வெதுவெதுப்பான வெந்நீரில் தான் இவற்றை குளிப்பாட்டுகின்றனர். வாரத்துக்கு இருமுறை நீச்சல் பழக வைக்கி ன்றனர். ஒரு பந்தய சேவலை வளர்ப்பதற்கு ரூ.30 ஆயிரம் இந்திய ரூபாய் வரை செலவாகிறது என இவர்கள் கூறுகின்றனர்.

# சிரிய ஜனாதிபதி ரஷ்யாவில் தஞ்சம்; அரண்மனை கிளர்ச்சியாளர்கள் வசம்

அல் – குவைதா அமைப்பின் ஒரு பகுதியான, எச்.டி.எஸ்., எனப்படும் ஹயாத் தாஹ்ரிர் அல்ஷாம் என்ற அமைப்பு தலைமையிலான சிரிய அரசுக்கு எதிரான ஆயுதம் ஏந்திய கிளர்ச்சிப் படைகள், கடந்த மாதம், 27ம் திகதி தீவிர தாக்குதலை ஆரம்பித்தன. அலெப்போ நகரைக் கைப்பற்றிய கிளர்ச்சிப் படைகள், நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான ஹோம்ஸ் நகரையும் சுற்றி வளைத்தன.



இதனைத் தொடர்ந்து, டாரா, குனேத்ரா, சுவேடா ஆகிய நகரங்களையும் கைப்பற்றின. எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸை, கிளர்ச்சி படைகள் ஞாயிற்றுக்கிழமை(08) கைப்பற்றின. தலைநகரை கிளர்ச்சிப்படைகள் நெருங்கியதை அறிந்த ஜனாதிபதி அஸாத், விமானம் மூலம் தப்பிச் சென்றார். ஞாயிற்றுக்கிழமை(08) இவர் சென்ற விமானம் மாயமாக மறைந்ததாகவும், விமானம் தொடர்பான தகவல்கள் ரேடாரிலிருந்து தொடர்பு விடுபட்டதால் கிடைக்கப்பெறவில்லை என செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் தற்போது அவர் ரஷ்யாவில் இருப்பதாக தெரிய வருகிறது.

இதனையடுத்து, நாட்டின் நிர்வாகம் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக கிளர்ச்சிப் படைகள் தெரிவித்தன. ஆனால் ஆஸாத் எந்த நாட்டுக்குச் சென்றார் என்ற தகவல் வெளியாகாமல் மர்மமாக இருந்தது.

அதற்கு தற்போது விடை கிடைத்துள்ளது.

சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து தப்பியோடிய அஸாத் மற்றும் அவரது குடும்பத்தினர் ரஷ்யா, மொஸ்கோவில் தஞ்சம் புகுந்துள்ளனர். மனிதாபிமான அடிப்படையில் ரஷ்யா அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது என ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அஸாத் ரஷ்யா விற்கு தப்பிச் சென்றதால், சிரியா கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸ் அரண்ம னைகளைக் கைப்பற்றினர். 50 ஆண்டு காலமாக தந்தை, மகன் என ஆட்சியை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த அஸாத் குடும்பத்தின் அரண்மனைக்குள் கிளர்ச்சியாளர்கள் உள்ளே நுழைந்தனர். அஸாத் மற்றும் அவரது தந்தையின் புகைப்படத்தை அகற்றினர். அரண்மனையில் கிளர்ச்சியாளர்கள் உலா வரும் வீடியோக்கள் இணையத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## தாய்வானின் அருகே சீன போர்க் கப்பல்கள்; பாதுகாப்பினை அதிகரித்த தாய்பே



தாய்வானின் இராணுவம் நேற்று (09) அவசரகால பதிலளிப்பு மையத்தை அமைத்து அதன் எச்சரிக்கை நிலையை உயர்த்தியதுடன், போர் தயார் நிலைப் பயிற்சிகளையும் ஆரம்பித்துள்ளது.

தாய்வான் மற்றும் அதை சுற்றியுள்ள பிராந்தியத்திற்கு அருகிலுள்ள கடல் பகுதியில் சீனா கிட்டத்தட்ட 90 கடற்படை, கடலோர காவல்படை கப்பல்களை வைத்திருப்பதாக தைபே பாதுகாப்பு வட்டாரம் ரொய்ட்டர் செய்திச் சேவையிடம் தெரிவித்துள்ளது. போர்க்கப்பல்களைப் பொறுத்தவரை, வார இறுதியில் அதன் எண்ணிக்கை 08 இல் இருந்து 14 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தாய்வானை தனது சொந்தப் பிரதேசம் என்று கூறிவரும் சீனா, தாய்வான் ஜனாதிபதி லாய் சிங்-தேவின் பசிபிக் பயணத்திற்கு பதிலடியாக மற்றொரு சுற்று பயிற்சியை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில்தான் சீனாவின் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திங்கட்கிழமை(09) முதல் புதன் (11)வரை ஜெஜியாங் மற்றும் புஜியன் மாகாணங்களுக்கு கிழக்கே ஏழு தடைசெய்யப்பட்ட வான்வெளி மண்டலங்களை சீனா அறிவித்துள்ளது. சர்வதேச விதிகளின்படி, ஏனைய விமானங்கள் கட்டுப்பாட்டாளர்களின் அனுமதியுடன் அவற்றை கடந்து செல்ல முடியும் என்று தாய்வான் கூறியுள்ளது.

இந்த கருத்துக்கான ரொய்ட்டரின் கோரிக்கைக்கு சீனாவின் பாதுகாப்பு அமைச்சகம் உடனடியாக பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே, தாய்வானின் இராணுவம் அதன் "போர் தயார்நிலை பயிற்சிகளை" மூலோபாய இடங்களில் செயல்படுத்தியதாகவும், அதன் கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு படகுகள் சீன இராணுவ நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

## இந்தோனேசியாவில் நிலச்சரிவு; 10 பேர் உயிரிழப்பு



இந்தோனேசியா நாட்டின் முக்கிய தீவான ஜாவாவில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வந்தது. இதன் காரணமாக அங்கு நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இதில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் இருவரை காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்கு ஜாவா மாகாணத்தின் சுகாபூமி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த தொடர் மழையால் மலையோர குக்கிராமங்களில் மண் பாறைகள் மற்றும் மரங்கள் இடிந்து விழுந்ததால் 170 இற்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆறுகள் கரைபுரண்டு ஓடுகின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் 172 கிராமங்களை அழித்தது. 3000 இற்கும் மேற்பட்ட மக்கள் தற்காலிக அரசாங்க முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 31 பாலங்கள், 81 வீதிகள் மற்றும் 539 ஹெக்டேயர் நெல் வயல்கள் அழிந்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நோபல் பரிசு பெற்ற சிறைக் கைதி நர்கிஸ்; முதல்முறையாக பொதுவெளியில் உரை

ஈரானில் கடந்த 1979 ஆம் ஆண்டு நடந்த இஸ்லாமிய புரட்சிக்கு பின் அந்நாட்டில் இஸ்லாமிய சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டது. இதனை எதிர்த்து அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது எதிர்ப்புக் குரல் எழுந்து வந்தது.



அப்படி அரசின் அடிப்படை வாதத்தை எதிர்த்து குரல் கொடுத்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு வந்தனர். அந்த வரிசையில் பெண்கள் ஹிஜாப் அணிய நிர்பந்திக்கப்படுவதற்கு எதிராக போராடி வந்த பெண் பத்திரிகையாளரும் சமூக செயல்பாட்டாளருமான நர்கீஸ் முகமதி (52 வயது) கடந்த 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் உள்ள அவருக்கு கடந்த 2023 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது உலக அளவில் பேசு பொருளானது. பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்த்து போராடி வருவதால் சிறையில் உள்ள அவருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஈரான் அரசு இதற்கு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நோபல் பரிசு பெற்ற பின்னர் முதல் முறையாக சிறையிலிருந்து மருத்துவ விடுப்பில் வெளியே வந்துள்ளார் நர்கிஸ் முகமதி. எலும்பு அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருத்துவ காரணங்களுக்காக மூன்று வாரங்கள் சிறையிலிருந்து கடந்த புதன்கிழமை(04) விடுவிக்கப்பட்டார்.

அவரை நோபல் பரிசு குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை(08) தொடர்பு கொண்டு பேசியுள்ளது. இந்த உரையாடல் வீடியோவை நோபல் பரிசு குழு பொதுவெளியில் வெளியிட்டுள்ளது.

எனது சக கைதிகளில் ஒருவர், சிறையில் ஆண்கள் வார்டில் இருந்த தனது கணவரை தொடர்பு கொண்டார். அவர்கள் மூலமே எனக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது என்ற செய்தியை அறிந்து கொண்டோம். அது நம்ப முடியாததாக இருந்தது. எபின் சிறைச்சாலை முழுவதும் இந்த செய்தி பரவிய போது பெண்கள் வார்டு "பெண் வாழ்க்கை சுதந்திரம்" (**Women Life Freedom**) என்ற முழக்கத்தால் நிறைந்ததை முகமதி அந்த வீடியோவில் நினைவு கூர்ந்தார். இந்த வீடியோவில் பச்சை நிற டாப்ஸ் அணிந்திருந்த முகமதி தலையில் எந்தவித ஹிஜாப் உம் அணியாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. முகமதியின் நிபந்தனையற்ற நிரந்தர விடுதலைக்கு உலகமெங்கிலும் இருந்து சமூக செயல்பாட்டாளர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

## போர் நிறுத்த ஒப்பந்தத்தினை மீறி ஹிஸ்புல்லா அமைப்பு மீது இஸ்ரேல் தாக்குதல்

இஸ்ரேலிய பாதுகாப்பு படையின் விமானங்கள் ஞாயிற்றுக்கிழமை (08) தெற்கு லெபனானில் அமைந்துள்ள ஆயுதக் கிடங்கில் செயல்பட்டு வந்த ஹிஸ்புல்லா அமைப்பினைச் சேர்ந்த நபர்கள் மீது தாக்குதலை நடத்தியது.

ஹிஸ்புல்லா அமைப்பினர் குறித்த பகுதியில் பதுங்கியிருந்தமை மூலம் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா மீறியதாக இஸ்ரேலியப் படைகள் குற்றம்சாட்டியது.

ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதல் அரங்கேறினாலும், இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வின்படி செயல்படுவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

ஹிஸ்புல்லாவுடனான மோதலை தீவிரப்படுத்துவதன் ஒரு பகுதியாக கடந்த ஒக்டோபர் மாதம் தெற்கு லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர்,



இஸ்ரேல் அரசாங்கம் நவம்பர் 26 அன்று இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தது, அது மறுநாள் அமுலுக்கு வந்தது.

இந்த ஒப்பந்தத்தை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கும் போது, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹிஸ்புல்லாவின் செயல்களை நம்பியே ஒப்பந்தம் அமையும் என்றும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் ரூ.237 கோடிக்கு ஏலம் போன காலணிகள்



புகழ்பெற்ற ஹாலிவுட் திரைப்படமான "தி விசார்ட் ஆஃப் ஓஸ்"-இல் (**The Wizard of Oz**) நடிகை ஜூடி கார்லேண்ட் அணிந்திருந்த ஒரு ஜோடி ரூபி சிவப்பு காலணிகள், கடந்த சனிக்கிழமை (டிசம்பர் 7) அமெரிக்காவில் நடந்த ஒரு ஏலத்தில் 28 மில்லியன் டாலருக்கு விற்கப்பட்டுள்ளன.

கடந்த 1939இல் வெளியான இந்தத் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டதில், நான்கு ஜோடி காலணிகள் மட்டுமே எஞ்சியிருந்தன. அதில், ஒரு ஜோடி புகழ்பெற்ற ஹீல்ஸ் காலணிகள் தான் சமீபத்தில் ஏலமிடப்பட்டன. இதே காலணிகள் தான் முன்பொருமுறை மினசோட்டா அருங்காட்சியகத்திலிருந்து திருடப்பட்டன.

இதற்கான ஆன்லைன் ஏலம் ஒரு மாதத்திற்கு முன்பு தொடங்கியது. இந்த காலணிகளை ஏலம் விட்ட ஹெரிடேஜ் ஏல நிறுவனம், காலணிகளுக்கு சுமார் 25 கோடி ரூபாய் வரை மட்டுமே கிடைக்கும் என்று எதிர்பார்த்தது. ஆனால், யாரும் எதிர்பாராத வகையில் சுமார் 237 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.

## ஆழ்துளை கிணற்றில் சிக்கிய இளைஞன்

தாய்லாந்து மியான்மார் எல்லையில் சீனாவைச் சேர்ந்த 22 வயதான லியு சுவானி என்ற இளைஞர், 12 மீட்டர் ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் மூன்று நாட்களாக சிக்கிக் கொண்ட விசித்திரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

தாய்லாந்து ஊடக அறிக்கையின்படி, அருகிலுள்ள காட்டில் இருந்து சில விசித்திரமான அலறல்களை கிராமவாசிகள் கேட்டுள்ளனர். ஆனால் அவர்கள் அந்த ஒலிகளை பேய் ஒலிகள் என்று தவறாக நினைத்துக் கொண்டதால் அங்கு செல்ல முயற்சிக்கவில்லை. தொடர்ந்து சத்தம் வரத் தொடங்கியதையடுத்து, பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஒலியின் சத்தத்தை கண்டறிந்த பொலிஸார், 22 வயதான லியு சுவானி என்ற இளைஞர், 12 மீட்டர் ஆழமுள்ள கிணற்றின் அடிப்பகுதியில் விழுந்துவிட்டதைக் கண்டுபிடித்ததாக செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதையடுத்து, மீட்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, கிணற்றில் இருந்து லியு சுவானி மீட்கப்பட்டார். மூன்று நாட்கள் இரவும் பகலும் உணவு, தண்ணீர் இல்லாமல் தவித்த சுவானி மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டார் மற்றும் பலத்த காயங்களுடன் இருந்தார். சுவானியின் மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதுடன் அவரது தலை மற்றும் பிற இடங்களில் காயங்கள் காணப்பட்டன.



இதுமட்டுமன்றி உடலில் பல இடங்களில் கீறல்கள் இருந்தன. 30 நிமிட மீட்புப் பணிக்கு பின் வெளியே எடுக்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சுவாயானியின் கூற்றுப்படி, அவர் மூன்று நாட்கள் அங்கேயே சிக்கிக் கொண்டார், மேலும் அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு உத்தியைப் பயன்படுத்தினார். அதாவது, தனது ஆற்றலை தக்க வைத்துக் கொள்ள, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு முறை உதவிக்காக கத்தினார். இதற்கிடையில், காட்டில் இருந்து வினோதமான அலறல் சத்தம் கேட்டதாக அருகில் உள்ள கிராம மக்கள் தெரிவித்தனர்.

காட்டில் இருந்து வெளியே வர முயன்றபோது தவறுதலாக லியு கிணற்றில் பொலிஸாருக்கு தெரிவித்தனர். தாய்லாந்து-மியான்மர் எல்லையில் சுவானி இருப்பதும், அவர் எப்படி அங்கு வந்தார் என்பதும் மர்மமாகவே உள்ளது. எனவே அவர் அந்த பகுதிக்கு எப்படி வந்தார் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையில், உள்ளூர் அதிகாரிகள் கிணறுகளை மூடுவதன் மூலம் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நடவடிக்கையின் மூலம் அந்த பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பார்கள் என குறிப்பிட்டனர். இந்த சம்பவம் ஆனது சீன சமூக வலைதளத்தில் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# இலங்கையை வீழ்த்திய தென்னாபிரிக்கா

## டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் முதலிடம்



இலங்கை - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 109 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்துள்ளது.

க்கெபர்ஹாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தெரிவு செய்து தமது முதல் இன்னிங்ஸிற்காக 358 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டியில் ரியான் ரிக்கல்டன் தனது சர்வதேச அறிமுக டெஸ்ட் சதத்தைப் பெற்றுக் கொண்டார். அவர் 101 ஓட்டங்களை குவித்திருந்தார். மேலும், கைல் வெர்ரைன் 105 ஓட்டங்களை குவித்திருந்தார்.

முதல் இன்னிங்சில் லஹிரு குமார 79 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களையும், அசித்த பெர்னாண்டோ மூன்று விக்கெட்டுகளையும், விஷ்வ பெர்னாண்டோ இரண்டு விக்கெட்டுகளையும், பிரபாத் ஜயசூரிய ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி 328 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பதும் நிஸ்ஸங்க 89 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 48 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் மற்றும் ஏஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் தலா 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாப்பிரிக்கா அணியின் டேன் பேட்டர்சன் 71 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களையும், மார்கோ ஜான்சன் மற்றும் கேசவ் மஹராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 30 ரன்கள் முன்னிலை யுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாப்பிரிக்கா 317 ஓட்டங் களை குவித்திருந்தது. அணியின் தலைவர் தெம்பா பவுமா 66 ஓட்டங்களையும், எய்டன் மார்க்ரம் 55 ஓட்டங்களையும் குவித்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸ் சார்பாக பிரபாத் ஜயசூரிய ஐந்து விக்கெட்டுக்களையும், விஷ்வ பெர்னாண்டோ இரண்டு விக்கெட்டுக்களையும், லஹிரு குமார மற்றும் அசிதா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதன்படி, இலங்கை அணி தீர்க்கமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற 348 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்துள்ளது.




குசல் மெண்டிஸ் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, கேசவ் மஹராஜின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தனஞ்சய டி சில்வா ககிசோ ரபாடா வீசிய பந்தில் 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து இலங்கை அணியின் பின் வரிசை துடுப்பாட்ட வீரர்களான பிரபாத் ஜயசூர்யா, விஷ்வா பெர்னாண்டோ, லஹிரு குமார ஆகியோர் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் ஆட்டமிழந்தனர்.

சிறப்பாக பந்துவீசிய தென்னாபிரிக்காவின் கேசவ் மஹராஜ் 76 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுகளையும், பேட்டர்சன் மற்றும் ரபாடா தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதன்படி, இந்தப் போட்டியில் 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியுடன் ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் தென்னாப்பிரிக்கா முதலிடத்திற்கு வந்துள்ளது.

# ரொனால்டோவின் தீவிர ரசிகர் இஸ்ரேலிய படைகளால் சுட்டுக்கொலை



**ஆர்.மனோசங்கர்**

இஸ்ரேல் - பாலஸ்தீனம் போரில் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ போல் வரவேண்டும் என்ற கனவு கண்ட 14 வயது சிறுவன் கொல்லப்பட்ட சம்பவம் தற்போது வெளியாகியுள்ளது.

மேற்குக் கரையைச் சேர்ந்தவர் நஜி அல் பாபா, பந்தை உதைக்க ஆரம்பித்ததில் இருந்தே சிறந்த கால்பந்து நட்சத்திரமாக வர வேண்டும் என்று கனவு கண்டார்.

நஜியின் விருப்பமான வீரர் போர்த்துக்கல் அணியின் ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆவார். அவரைப் போலவே உலகமே அறியும் கால்பந்து நட்சத்திரமாக மாறவேண்டும் என்ற கனவில் இருந்தார்.

இருப்பினும், பதினான்கு வயது இளைஞனின் கனவுகள் நீண்ட காலம் நீடிக்கவில்லை. நஜி தனது நண்பர்களுடன் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தபோது இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

கால்பந்தை மட்டுமே மனதில் கொண்டு, ஹெப்ரோனுக்கு அருகிலுள்ள ஹல்ஹுல் என்ற இடத்தில் உள்ள விளையாட்டுக் கழகத்தில் நஜி மணிக்கணக்கில் பயிற்சி எடுத்து வந்தார்.

பாடசாலை முடிந்த பிறகு, நண்பர்களுடன் கால்பந்து விளையாடுவதில் தான் அவரது முழு சந்தோசமும் இருந்தது.

நவம்பர் மூன்றாம் திகதி நஜி தனது பெற்றோரிடம் அனுமதிப்பெற்று கால்பந்து விளையாடச் சென்ற போது இஸ்ரேலிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அல்ஜசீரா செய்தி வெளியிட்டிருந்தது.

பாடசாலையில் இருந்து வந்ததும் நண்பர்களுடன் விளையாடச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறினார் நஜி. இதற்கிடையே, சம்பவ இடத்திற்கு வந்த இஸ்ரேல் இராணுவம் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டது. நஜியும் அவரது நண்பர்களும் பாலஸ்தீனி யர்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதியில் இருந்ததாக இஸ்ரேலிய இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கு காரணம் காட்டியது.

சுடப்பட்ட பின்னர், நஜி மருத்துவ சிகிச்சை பெறாமல் 30 நிமிடங்கள் தரையில் கிடந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

# உசைன் போல்ட்டின் சாதனையை 16 வயது கௌட் (Gout) முறியடிப்பு



உலகின் தலைசிறந்த குறுத்தூர ஓட்ட வீரரான உசைன் போல்ட்டின் சாதனையை 16 வயது அவுஸ்திரேலிய குறுத்தூர ஓட்ட வீரரான Gout Gout முறியடித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பாடசாலைகளுக்கிடையிலான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான 200 மீட்டர் போட்டியில் பங்கேற்ற Gout, 20.04 விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்துள்ளார்.

16 வருடங்களுக்கு முன்னர் ஒரு தடகள வீரரின் சாதனையான 20.13 வினாடிகளை Gout முறியடித்தள்ளார்.

2003 இல் உசைன் போல்ட் ஏற்படுத்திய இச் சாதனையை Gout அதே வேளையில், இந்த போட்டியில் 1968 இல் பீட்டர் நார்மன் (Peter Norman) உருவாக்கிய ஓசியானிய (Oceanian) சாதனையையும் (அவுஸ்திரேலிய தேசிய சாதனை) முறியடிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 29 ஆம் திகதிக்கு 17 வயதையடையும் புழரவக்கு, 18 வயதுக்குட்பட்ட 200 மீட்டர் போட்டியில் அவரது சாதனையானது அமெரிக்க வீரர் எரியோன் நைட்டனுக்கு இரண்டாம் நிலையில் உள்ளது (அவரது இறுதி நேரம் 19.84 வினாடிகள்).

அத்தோடு Gout 100 மீட்டர் போட்டியில் பெற்றுக் கொண்ட 10.04 வினாடிகள் என்ற சாதனை அவருக்கு கிடைத்த காற்றின் ஆதரவால் (3.4 m/s), அச் சாதனை சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஆனால் அந்தப் போட்டியில் 10.17 வினாடிகளில் ஓடி வெற்றிபெற்றிருந்தார்மேலும், 20வயதுக்குட்பட்டோருக்கான உலக 200 மீட்டர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்தியதீவுகள் அபார வெற்றி

## பங்களாதேஷ்-மேற்கிந்திய முதல் ஒரு நாள் போட்டி





தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி நேற்று செயிண்ட் கிட்சில் நடைபெற்றது.

மேற்கிந்தி தீவுகள் 47.4 ஓவரில் 5 விக்கெட்டுகளை இழந்து 295 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரில் 1-0 என்ற நிலையில் மேற்கிந்தி தீவுகள் முன்னிலை வகிக்கிறது.

பங்களாதேஷ் அணி மேற்கிந்தி தீவுகள் சுற்றுப்பயணத்தில் 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் 1-1 என சமனிலை வகித்தன.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது. தன்ஜித் ஹசன் 60 ஓட்டங்களில் வெளியேறினார். கெப்டன் மெஹிதி ஹசன் 74 ஓட்டங்களில் வெளியேறினார். இறுதியில் நிதானத்துடன் ஆடிய மஹமதுல்லா அரை சதம் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மேற்கிந்தி தீவுகள் சார்பில் ரொமாரியோ ஷெப்பர்ட் 3 விக்கெட்டும், அல்ஜாரி ஜோசப் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கியில் பங்களாதேஷை வீழ்த்திய இந்தியா



ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி லீக் போட்டியில் கோல் மழை பொழிந்த இந்திய பெண்கள் அணி 13-1 என பங்களாதேஷை வீழ்த்தியது.

ஓமானில், பெண்களுக்கான ஜூனியர் ஆசிய கிண்ண ஹாக்கி 9ஆவது பகுதி நடைபெறுகிறது.

"நடப்பு சாம்பியன்" இந்தியா, சீனா, ஜப்பான், இலங்கை உட்பட மொத்தம் 10 அணிகள் இரு பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன.

ஏ" பிரிவிலுள்ள இந்திய அணி, தனது முதல் லீக் போட்டியில் பங்களாதேஷை எதிர்கொண்டது. ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி, முதல் பாதி முடிவில் 5-1 என முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியிலும் அசத்திய இந்திய வீராங்கனைகள் கோல் மழை பொழிந்தனர். ஆட்டநேர முடிவில் இந்திய அணி 13-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தியா சார்பில் மும்தாஜ் 4, தீபிகா, கனிகா தலா 3, மணிஷா, பியூட்டி, சாக்சி தலா ஒரு கோல் அடித்தனர். வங்கதேச அணிக்கு ஆர்பிதா பால் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.